விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 293 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 22 புதன்கிழமை (08.10.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA(Hons)
OCTOBER INTAKE | 2025
அனுமதிகளுக்கு அழைக்கவும்!
(C-4053)
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
021 7534 807

### போலி விளம்பரத்தை நம்பி

## ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாயை இழந்த யாழ்.இளைஞன்

(யாழ்ப்பாணம்)

கைபேசி தொடர்பான போலி விளம்பரத்தை நம்பி யாழ்ப்பாண இளைஞன் ஒருவர் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் பணத்தை இழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

29ஆம் குடியேற்றத் திட்டம், பாண்டிருப்பு - 02, கல்முனை என்ற முகவரியைச் சேர்ந்த நபர் ஒருவர் விலையுயர்ந்த கைபேசிகள் இருப்பு இருப்பதாகவும் விசேட விலைக்கழிவில் 334,000 ரூபாயுக்கு அதனை வழங்குவதாகவும்

15ஆம் பக்கம் பார்க்க

## பொருளாதார மீட்சியை அடைய முறையான வேலைத்திட்டம் முன்னெடுப்பு

### ஐ.எம்.எப் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

பொருளாதார மீட்சியை அடைய முறையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என ஐ.எம்.எப் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும்


16ஆம் பக்கம் பார்க்க



### பொறுப்புக்கூறல் விடயத்தில்

# ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்

### இலங்கையிடம் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து



(பிரெஸல்ஸ்)

பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

### முல்லைத்தீவில்

## ஐஸ் போதையுடன் பொலிஸ் அதிகாரி கைது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்காவில் பகுதியில், பொலிஸ் அதிகாரி ஒருவர் ஐஸ் போதைப் பொருளுடன் நேற்றுக்

15ஆம் பக்கம் பார்க்க

### யாழ்.நாவற்குழியில்

## ரயில் மோதியதில் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நாவற்குழியில் புகையிரதம் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டம் பகுதியைச் சேர்ந்த எட்வேட்

15ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸாரின் செயற்பாட்டைக் கண்டித்து வடக்கில் சட்டத்தரணிகள் போராட்டம்



16ஆம் பக்கம் பார்க்க

## சமுர்த்தி உத்தியோகத்தர் விபத்தில் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

சித்தங்கேணியில் இடம்பெற்ற வீதி விபத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் அராலி தெற்கு, வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கந்தசாமி தர்ஷன் (வயது-48) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

சங்கானைப் பிரதேச செயலகத்தில் கடமையாற்றிவரும் அவர் கடந்த முதலாந் திகதி வட்டுக்கோட்டை - சித்தங்கேணி வீதி ஊடாக வீட்டிலிருந்து

15ஆம் பக்கம் பார்க்க

### 2026ஆம் ஆண்டிலிருந்து

## வடக்கில் லஞ்ச் சீற் பாவனைக்குத் தடை

### பதிலீடாக வாழையிலை

(யாழ்ப்பாணம்)

2026ஆம் ஆண்டிலிருந்து வடக்கு மாகாணம் முழுவதும் லஞ்ச் சீற் பாவனைக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பதிலீடாக வாழையிலை பயன்படுத்துவதென ஆளுநர்

15ஆம் பக்கம் பார்க்க

## பிரதமர் ஹரிணி இந்தியா விஜயம்

(கொழும்பு)

பிரதமர் ஹரிணி அமரசூரிய இந்தியா விஜயம் செய்யவுள்ளார்.

NDTV உலக உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே அவர் இந்தியாவின் புதுடில்லிக்குப் பயணமாகவுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## சுதுமலை அம்மன் ஆலய நிர்வாகத்துக்கு எதிராகப் போராட்டம்




15ஆம் பக்கம் பார்க்க

**நடுவு நிலை தவறா நன்னெறி காத்தும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுவரெலியாவில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை பூக்கும் நீலக்குறிஞ்சி மலர்கள்

## குவியும் சுற்றுலாப் பயணிகள்



12 ஆண்டுகளுக்கு ஒரு முறை பூக்கும் பூவான நீலக் குறிஞ்சி மலர்கள் தற்போது இலங்கையின் மத்திய மலை நாட்டின் நுவரெலியா மாவட்டத்தில் 2,100 மீற்றருக்கும் அதிகமான உயரத்தில் ஒளிந்திருக்கும் தேசிய பூங்காவின் ஹோட்டன் சமவெளியில் அதிகமான இடங்களில் பூக்கத் தொடங்கியுள்ளன.

இந்தப் பூக்களைக் காண வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் ஆர்வத்துடன் படையெடுத்து வருகின்றனர்.

ஒவ்வொரு 12 ஆண்டுகளுக்கும் ஒரு முறை குறித்த செடிகளில் பூக்கும் மலர்களே, இதன் தனித்துவமாகக் கருதப்படுகிறது.

ஹோட்டன் சமவெளியில் பூக்கும் இந்த மலர்களிடம் வசீகரிக்கும் வாசம் இல்லாவிடினும் ஒரு மென்மையான வாசம் இருப்பதாகவும், பூக்கும் காலங்களில் இவற்றை 10இற்கும் மேற்பட்ட தேனீ இனங்கள் தேடி வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

புல்வெளிகள் நிறைந்த ஹோட்டன் சமவெளி மலைப் பகுதியில் வளரும் இந்தச் செடிகளில் வெள்ளை, நீலம், ஊதா மற்றும் இளஞ்சிவப்பு உள்ளிட்ட பல வண்ணங்களில் பூத்துள்ளதாகவும் அவைகள் குறைந்தபட்சம் அரை மீற்றரிலிருந்து ஒரு மீற்றர் வரை உயரம் கொண்டவை எனவும் ஆராய்ச்சியாளர்களும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களும் தெரிவிக்கின்றனர். (ம-7)

### யாழ்ப்பாணம் சிறைச்சாலையில்

# கணவனுக்கு போதைப்பொருள் வழங்க முற்பட்ட மனைவி கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள தனது கணவனுக்கு ஹெரோயினை வழங்க முற்பட்ட அவரது மனைவி கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் போதைப்பொருள் தொடர்பிலான குற்றச்சாட்டில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரைப் பார்வையிட வந்த அவரின் மனைவி உணவுப் பொதிக்குள் 05 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளை மறைத்து வைத்து சிறைச்சாலைக்குள் கடத்த முற்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவரைப் பார்வையிட வந்த நண்பரான இளைஞன் ஒருவர், 5 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் சிறுதொகை கஞ்சா ஆகியவற்றை உணவுப் பொதிக்குள் மறைத்து கடத்த முற்பட்ட நிலையில் அவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7)

# பொறுப்புக்கூறல் விடயத்தில் அநுர அரசும் தளர்வுப் போக்கு

## மனித உரிமைகள் கண்காணிப்பகம்

(கொழும்பு)

பொறுப்புக்கூறல் விடயத்தில் அநுர அரசாங்கமும் தளர்வுப் போக்கைக் கடைப்பிடிக்கின்றது என மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடரில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (6) இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானம் குறித்து ஜெனிவாவில் உள்ள மனித உரிமைகள் கண்காணிப்பக அலுவலகத்தின் பிரதிப் பணிப்பாளர் லூஸி மக்கேர்னனால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆதாரங்களைத் திரட்ட குறைந்தபட்சம் மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டமையானது இலங்கையில் ஆட்சிப்பீடமேறும் அரசாங்கங்கள் பொறுப்புக்கூறலை முடக்கினாலும், ஏதேனுமொரு நாள் நீதியை அடைய முடியும் என்ற சிறுதுளி நம்பிக்கையை பாதிக்கப்பட்ட தரப்பினர் மத்தியில் விதைத்திருக்கின்றது.

இலங்கையில் ஆட்சிப்பீடமேறிய அரசாங்கங்கள் யுத்தகாலத்தில் மீறல் குற்றங்கள் இடம்பெறவில்லை என மறுத்துவந்ததுடன் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் இடையூறுகளை ஏற்படுத்தியும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு எதிராக ஒடுக்குமுறைகளைப் பிரயோகிப்பதற்கு அரச பாதுகாப்புத்துறையைப் பயன்படுத்தியும் வந்தது. யுத்தகாலக் குற்றங்கள் தொடர்பில் உள்ளக நீதிப்பொறி முறையை நிறுவுவதாக அளித்த வாக்குறுதியையும், அதுசார்ந்த கடப்பாட்டையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றாததன் காரணமாகவே 2021ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.


முன்னைய அரசாங்கங்களுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டு தெரிவான ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அரசாங்கம் இவ்விடயத்தில் தளர்வுப்போக்கைப் பின்பற்றுவதுபோல் தெரிந்தாலும், அவ்வரசாங்கமும் ஐ.நாவின் பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தை நிராகரித்துள்ளது. அதுமாத்திரமன்றி போரின் பின்னரான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதாகவும், முக்கிய மனித உரிமை மீறல் வழக்குகள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அரசாங்கம் உறுதியளித்திருப்பினும், அவற்றில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான முன்னேற்றமே அடையப்பட்டுள்ளது.

இந்நிலையில் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான வலுவான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் ஊடாக உண்மையைக் கண்டறிவதற்கான உள்ளகப்பொறிமுறையை வலுப்படுத்துவதாக அளித்த வாக்குறுதியை அநுரகுமார திஸாநாயக்க அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும்.

இலங்கையில் இதுவரை சுமார் 20 மனிதப் புதைகுழிகள் கண்டறியப்பட்டுள்ள போதிலும், அவற்றில் எந்தவொரு மனிதப்புதைகுழி தொடர்பிலும் வெற்றிகரமான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் செம்மணி மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகள் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் என்றுள்ளது. (ம-7)

# மரண அறிவித்தல்

தோற்றம்
29 - 02 - 1948



மறைவு
04 - 10 - 2025

## கந்தசாமி பாலசுப்பிரமணியம்

மாதனை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி பாலசுப்பிரமணியம் அவர்கள் கடந்த (04.10.2025) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் கனகமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்லையா, நேசம்மா, இரத்தினசிங்கம், நாகரத்தினம் ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்றவர்களான நடராசா, சிவபாக்கியம் ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற இராசமாணிக்கம் மற்றும் சரஸ்வதி, காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, இராசகோபால் மற்றும் நகுலேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.10.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பருத்தித்துறை கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மாதனை,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

தகவல்:
குடும்பத்தினர்
077 607 9210

(C-4055)

### புங்குடுதீவில்

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைதாகிப் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் கடந்த மாதம் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து எவ்வித அனுமதியும் இன்றி பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் முகமாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மூவர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

தீவக சிவில் சமூக செயலாளர் மா.இளம்பிறையன், உபதலைவர் க.குணாளன், பொருளாளர் க.நாவலன் ஆகியோர் கைதுசெய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட நிலையில் நீதிமன்றினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய பிரேரணையை முற்றாக நிராகரிக்கிறோம்

## பேரவையில் இலங்கை அறிவிப்பு

(ஜெனீவா)

**இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்றிட்டத்தின் நம்பகத்தன்மை, அச்செயற்றிட்டம் இயங்கும் விதம் மற்றும் அதற்கான நிதி ஒதுக்கீடு என்பன தொடர்பில் தாம் நீண்டகாலமாகக் கேள்வி எழுப்பிவருவதாகவும், அச் செயற்றிட்டத்தின் மூலம் இலங்கை மக்கள் எவ்வகையிலும் நன்மை அடையவில்லை எனவும் பேரவையில் சுட்டிக்காட்டிய இலங்கையின் வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணதிலக, இலங்கை தொடர்பில் இணையனுசரணை நாடுகளால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் புதிய பிரேரணையை முழுமையாக நிராகரிப்பதாக அறிவித்தார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் கடந்த 8 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது.

இக்கூட்டத்தொடரின்போது நிறைவேற்றும் நோக்கில் பிரிட்டன் தலைமையில் கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா உள்ளிட்ட இணையனுசரணை நாடுகளால் 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்ட 60/L1/Rev.1 எனும் புதிய பிரேரணை, நேற்று முன்தினம் திங்கட்கிழமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானம் குறித்து இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிவிக்கும் விதமாக உரையாற்றிய ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கான இலங்கையின் வதிவிடப்பிரதிநிதி ஹிமாலி அருணதிலக, புதிய பிரேரணை தொடர்பான உத்தியோகப்பற்றற்ற கலந்துரையாடல்களில் தாம் பங்கேற்றதாகவும், தம்மால் முன்மொழியப்பட்ட சில திருத்தங்கள் பிரேரணையில் உள்வாங்கப்பட்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

இருப்பினும் கரிசனைக்குரிய சில முக்கிய விடயங்கள் தொடர்பில் இணையனுசரணை நாடுகளுடன் இணக்கப்பாடு எட்டப்படவில்லை எனவும் அவர் கவலை வெளியிட்டார்.

அதேவேளை இலங்கை தொடர்பில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் ஆதாரங்களைத் திரட்டும் செயன்முறை குறித்துப் பிரஸ்தாபித்த அவர், அதற்கான ஆணை பேரவைக்கு இல்லை எனக் குறிப்பிட்டதுடன் அண்மையில் பேரவையில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் வெளியகப் பொறிமுறைகளை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என அறிவித்தமையை மீண்டும் நினைவுறுத்தினார்.

மேலும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு மிகக் குறுகிய காலப்பகுதியில் இலங்கை அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாகச் சுட்டிக்காட்டிய அவர், ஆகவே இப்புதிய பிரேரணையை தாம் முழுமையாக நிராகரிப்பதாக அறிவித்தார். (நி)

# முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு கோரிக்கைகளை பரிசீலிக்க தயார்

## அரசாங்கம் அறிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகள் பாதுகாப்பு தொடர்பாக விடுத்த கோரிக்கைகளை பரிசீலிக்க அரசாங்கம் தயாராகவிருப்பதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய அமைச்சர் விஜேபால, ஜனாதிபதிகளின் உரிமைகள் (இரத்து செய்தல்) சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட பல சலுகைகள் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் நீக்கப்பட்டன.

பல முன்னாள் ஜனாதிபதிகள் ஏற்கனவே வீடுகள் மற்றும் வாகனங்கள் போன்ற சில சலுகைகளை ஒப்படைத்துள்ளனர். எனினும், பாதுகாப்பு விடயம் ஜனாதிபதி உரிமைகள் (இரத்து செய்தல்) சட்டத்தின் கீழ் வராது.

சட்டத்தின் கீழ் சில சலுகைகள் நீக்கப்பட்டிருந்தாலும், அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

தேவைப்பட்டால், வாகனங்கள் உட்பட பாதுகாப்பு தொடர்பான கோரிக்கையை அவர்கள் முன்வைக்கலாம்.

அத்தகைய கோரிக்கைகளை பரிசீலிக்க அரசாங்கம் தயாராக உள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். (நி)

## நடப்பாண்டில் இதுவரை

# எலிக்காய்ச்சலினால் 10 பேர் உயிரிழப்பு


(அநுராதபுரம்)

அநுராதபுரம் மாவட்டத்தில் இந்த வருடம் எலிக்காய்ச்சலினால் 10 பேர் உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் வைத்தியர் என்.சி.டி. ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் எலிக்காய்ச்சலினால் 743 நோயாளர்கள் பதிவாகியதாகவும் அவர்களில் 16 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சீரற்ற காலநிலை காரணமாக எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையினால் அவர்களுக்கு நோயாளர் பராமரிப்பு சேவைகளை வழங்குவதில் பாரிய சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (நி)

# முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை சந்தித்தார் மகிந்த அமரவீர



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சுகவாழ்வு குறித்து விசாரிக்க முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர நேற்று தங்காலையிலுள்ள கார்ல்டன் இல்லத்திற்குச் சென்றுள்ளார்.

மகிந்த ராஜபக்ஷ கடந்த செப்ரெம்பர் 11 ஆம் திகதி விஜேராமயவில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறி தங்காலையில் உள்ள கார்ல்டன் இல்லத்தில் குடியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தீவிரமடையும் எச்.ஐ.வி எச்சரிக்கும் சுகாதாரத்துறை

(கொழும்பு)

நாட்டில் 15 முதல் 29 வயதுக்குட்பட்டவர்கள் இடையே எச்.ஐ.வி தொற்று அதிகரிக்கும் அபாயம் உள்ளதாக சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அதன்படி, 2025 ஆம் ஆண்டின், ஜனவரி முதல் மார்ச் மாதம் வரை அடையாளம் காணப்பட்ட புதிய எயிட்ஸ் நோயாளர்கள் உட்பட, 6,740 நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிக எண்ணிக்கையிலான எயிட்ஸ் நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தரவுகள் தெரிவிக்கின்றன.

அதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டில், 824 புதிய எச்.ஐ.வி தொற்றுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், எயிட்ஸ் நோயினால் 47 பேர் உயிரிழந்துள்ளனர்.

இலங்கை குறைந்த எச்.ஐ.வி பாதிப்பு உள்ள நாடாகக் கருதப்பட்டாலும், கடந்த ஆண்டு பதிவான புதிய தொற்றாளர்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பானது கவலையளிப்பதாக சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எயிட்ஸ் தொடர்பான சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் +94 703 733 933 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி)

# முட்டை விலையில் வீழ்ச்சி

(கொழும்பு)

உள்ளூர் சந்தையில் முட்டையின் விலை குறைந்துள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஒரு வெள்ளை முட்டை 28 ரூபாய்க்கும் சிவப்பு முட்டை 30 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுவதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## மகளிர் உலகக் கிண்ணம்

# நியூசிலாந்தை வீழ்த்தி தென்னாபிரிக்கா அபாரம்

மகளிர் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் இந்தூரில் நடைபெற்ற போட்டியில் நியூசிலாந்து- தென்னாபிரிக்கா அணிகள் மோதின.


முதலில் துடுப்பாட்டம் செய்த நியூசிலாந்து, தென்னாபிரிக்கா வீராங்கனைகளின் பந்து வீச்சைத் தாக்குப் பிடிக்க முடியாமல் 231 ஓட்டங்களில் ஆட்டமிழந்தது.

நியூசிலாந்து அணித்தலைவி ஷோபி டிவைன் அதிக பட்சமாக 85 ஓட்டங்கள் அடித்தார். ப்ரூக் ஹாலிடே 45 ஓட்டங்கள் அடித்தார். தென்னாபிரிக்க அணி சார்பில் நோன்குலுலேகோ எம்லாபா 4 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் 232 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் தென்னாபிரிக்கா களம் இறங்கியது. தொடக்க வீராங்கனையான அணித்தலைவி லாரா வால்வார்த் 14 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

அடுத்து தஸ்மின் பிரிட்ஸ் உடன் சுனேலுஸ் ஜோடி சேர்ந்தார். இருவரும் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். பிரிட்ஸ் 89 பந்தில் 101 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த மரிசானே காப் 14 ஓட்டங்களும், அன்னேகே போஸ்ச் ஓட்டங்கள் எதுவுமின்றிஅடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். என்றாலும், சுனேலுஸ் 83 ஓட்டங்கள் விளாசி ஆட்டமிழக்காமல் இருக்க தென்னாபிரிக்கா 40.5 ஓவரில் 234 ஓட்டங்கள் எடுத்து 6 விக்கெட் வித்தியாசத்தில் அபாரவெற்றி பெற்றது. (3)



## இந்தியா - ஆஸி.போட்டிக்கான டிக்கெட் விற்பனை அமோகம்!

### உச்சகட்ட ஆர்வத்தில் ரசிகர்கள்



இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒரு நாள் மற்றும் ரி-20 போட்டிகளில் விளையாடுகிறது. இந்தியா- அவுஸ்திரேலியா இடையிலான முதலாவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி பெர்த்தில் நடைபெறவுள்ளது.

இந்த வெள்ளைநிறப் பந்து போட்டித் தொடரைக் காண ரசிகர்கள் மத்தியில் அதிக ஆர்வம் காணப்படுகிறது.

8 ஆட்டத்துக்கும் சேர்த்து இதுவரை 1 லட்சத்து 75 ஆயிரம் டிக்கெட்டுகள் விற்பனையாகியுள்ளன. இன்னும் 30 ஆயிரத்துக்கும் குறைவான டிக்கெட்டுகளே எஞ்சியுள்ளன.

இதில் அவுஸ்திரேலியாவின் மிகப்பெரிய கிரிக்கெட் ஸ்டேடியமான மெல்போர்னில் எதிர்வரும் 31 ஆம் திகதி இவ்விரு அணிகள் இடையே இரண்டாவது ரி-20 போட்டி நடைபெறவுள்ளது.

இந்த ஆட்டத்துக்கு ரசிகர்களுக்கு ஒதுக்கப்பட்ட அனைத்து டிக்கெட்டுகளும் முழுமையாக விற்றுத் தீர்ந்து விட்டதாகப் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ரோகித் சர்மா, விராட் கோலி ஆகிய நட்சத்திர வீரர்கள் ரி-20 போட்டியில் இருந்து ஓய்வு பெற்றுவிட்ட போதிலும் அபிஷேக் ஷர்மா, சூர்யகுமார் யாதவ் உள்ளிட்டோரின் “சரவெடி” துடுப்பாட்டத்தைப் பார்க்க ரசிகர்கள் தீவிரமாக உள்ளனர். (3)

## ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ரி-20 தொடரை முழுமையாக கைப்பற்றிய பங்களாதேஷ்

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ரி-20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் ஷார்ஜாவில் நடைபெறுகிறது. 2 போட்டிகள் முடிவில் பங்களாதேஷ் 2-0 என கைப்பற்றி யது.

இந்நிலையில், இரு அணிகளுக்கு இடையிலான 3 ஆவது ரி-20 போட்டி ஷார்ஜாவில் நடைபெற்றது. நாணய சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் பந்துவீச்சை தேர்வு செய்தது.அதன்படி, முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 143 ஓட்டங்கள் எடுத்தது. டார்விஷ் 32 ஓட்டங்களும், செடிகுல்லா அடல் 28 ஓட்டங்களும் எடுத்தனர்.

பங்களாதேஷ் சார்பில் சயீபுதின் 3 விக்கெட்டும், நவ்சம் அகமது, தன்ஜிம் ஹசன் தனா 2 விக்கெட் வீழ்த்தினர்.

இதையடுத்து, 144 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பங்களாதேஷ் களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் தன்ஜிம் ஹசன் பொறுப்புடன் ஆடி 33 ஓட்டங்கள் சேர்த்தார்.

சயீப் ஹாசன் சிறப்பாக ஆடி அரை சதம் கடந்து 64 ஓட்டங்கள் குவித்து அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

இறுதியில், பங்களாதேஷ் 18 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 144 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றதுடன், ரி-20 தொடரை 3-0 என முழுவதுமாகக் கைப்பற்றி அசத்தியது. (3)







கொழும்பில் கடந்த சனிக்கிழமை தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தேசிய பூப்பந்தாட்டப் போட்டியில் மன்னார் மாவட்ட ஆண்கள் அணியினர் மூன்றாம் இடத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதார மீட்சி இன்னும் முழுமையடையாமல் உள்ளது

## உலக வங்கி

(வோஷிங்டன்)

இலங்கையின் அண்மைய பொரு ளாதார செயல்திறன் வலுவாக உள்ளது. எனினும், மீட்சி இன்னும் முழுமையடையாமல் உள்ளதுடன், வளர்ச்சி இன்னும் நெருக்கடிக்கு முந்தைய நிலைகளை விடக் குறைவானதாகவும், வறுமை நிலை கணிசமாக உயர்ந்துள்ளதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

மீட்சியை வலுப்படுத்துவதற்கு தொடர்ச்சியான பெரிய பொருளாதார ஸ்திரத்தன்மை, அவசர கட்டமைப்பு சீர்திருத்தங்கள் மற்றும் மிகவும் திறமையான, சிறந்த இலக்கு பொதுச் செலவுகள் தேவைப்படும் என்று உலக வங்கி குறிப்பிட்டது.

இலங்கையின் முன்னேற்றம் தொடர்பாக உலக வங்கி நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இலங்க்கயின் பொருளாதாரம் தொழில்துறையில் மிதமான மீட்சி மற்றும் சேவைகளில் நிலையான வளர்ச்சியால் 2025 ஆம் ஆண்டில் 4.6 சதவிகிதம் வளர்ச்சியடையும் என்று கணித்துள்ளது. எனி னும், அது 2026 ஆம் ஆண்டில் 3.5 சதவிகிதமாகக் குறையும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

இந்தக் கண்ணோட்டம் அதிகரித்த உலகளாவிய நிச்சயமற்ற தன்மை உட்பட அதிகரித்த அபாயங்களுக்கு உட்பட்டது.

இலங்கையின் அண்மைய பொருளாதார முன்னேற்றம் ஊக்கமளிப்பதாக இருந்தாலும், மீட்சி சீரற்றதாகவும் முழுமையற்றதாகவும் உள்ளது என்று மாலைதீவு, நேபாளம் மற்றும் இலங்கைக்கான உலக வங்கிப் பிரிவு பணிப்பாளர் டேவிட் சிஸ்லன் தெரிவித்தார்.

இலங்கையின் அண்மைய வளர்ச்சி வலுவாக இருந்தாலும், பண வீக்கம் குறைவாக இருந்தாலும், டொலர் வருகை வலுவாக இருந்தாலும், உணவு விலை கள் அதிகமாகவே உள்ளன.

மேலும், கையிருப்பு குவிப்பு குறைந்துள்ளது. இலங்கையின் பொருளாதார உற்பத்தி இன்னும் 2018 அளவை விட குறைவாகவே உள்ளது. வறுமை குறைந்து வந்தாலும், 2019 ஐ விட இரண்டு மடங்கு அதிகமாகவே உள்ளது.மேலும் ஊட்டச்சத்து குறைபாடு ஒரு தீவிரமான பிரச்சினையாகவே உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். (நி)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1954 - 12 - 22



மறைவு 2024 - 09 - 19

அமரர்.
தம்பிஜயா கிருஸ்ணமூர்த்தி

பாரினிலே எமை உயர்த்த ஏணியாய்
இருந்தீர்களே அப்பா,
இன்று ஆலமரம் போன்று உயர்ந்து
நிற்கின்றோம் நீங்கள் எம்முடன் இல்லையே
விடை கொடுக்க முடியாத உங்கள்
பிரிவை உணர மறுக்கிறது எம் உள்ளம்
எத்தனையாண்டுகள் ஆனாலும் எம் உயிருள்ளவரை
எங்கள் மனங்களில் வீற்றிருப்பீர்கள்
குலதெய்வமாக.

08.10.2025 இன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (1629)

12 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.


# வருடந்தோறும் 1.6 மில்லியன் தொன் பிளாஸ்ரிக் பயன்பாடு

(கொழும்பு)

இலங்கையில் ஆண்டுதோறும் 1.6 மில்லியன் தொன் பிளாஸ்ரிக் பயன்படுத்தப்படுவதாகவும், இதில் 70 சதவீதம் ஒருமுறை பயன்படுத்தப்படும் பிளாஸ்ரிக் என்றும் நேற்று பாராளுமன்றத்தில் தெரியவந்தது.

கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைச்சரிடம், பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ரத்ன சிறி கேள்வி எழுப்பிய போதே இந்தத் தகவல் தெரிய வந்தது.

ஆண்டுதோறும் பிளாஸ்டிக் பயன்பாடு தொடர்பான விடயங்களைக் கைத் தொழில் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க, இதன்போது முன்வைத்தார்.

ஆண்டுதோறும் 20 மில்லியன் தொன் தயிர் சட்டிகளும், 15 மில்லியன் தொன் லஞ்ச் ஷீட்களும், 20 மில்லியன் தொன் பொலித்தீன் பைகளும் பயன்படுத்தப்படுகின்றன. இந்த பிளாஸ்ரிக் மற்றும் பொலித் தீனில் சுமார் 70 சதவீதம் ஒரு முறை மட்டுமே பயன்படுத்தப்படுவதால், ஆண்டுதோறும் அதிக அளவு பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் சுற்றுச்சூழலில் வெளியிடப்படுவதாக அவர் தெரிவித்தார். இதனால் அவற்றைக் குறைப்பதில் அரசாங்கம் மிகுந்த கவ னம் செலுத்தி வருவதாகப் பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்தார். (நி)


பெயர்மாற்ற அறிவித்தல்

விளானை,களபூமி, காரைநகர் எனும் முகவரியை உடைய பா.ஹீதரன் ஆகிய நான் (702311462V) இன்று முதல் எனது பெயரினை பா.சிறீதரன் எனப் பெயர் மாற்றம் செய்கிறேன்.

எனவே எனது சகல ஆவணங்களிலும் மேற்குறித்த பெயரையே பயன்படுத்துவேன் என இத்தால் இலங்கை சனநாயக குடியரசின் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

இங்ஙனம் உண்மையுள்ள பா.சிறீதரன் (5608)


# இராசிபலன்

08.10.2025
புரட்டாதி 22 , புதன்கிழமை
பிரதமை முற்பகல் - 7.48 மணி வரை
துதியை பின்னிரவு- 5.31 மணிவரை

அச்சுவினி பின்னிரவு - 2.14 மணிவரை
சுப நேரம் - 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் - 12.02-1.32 மணிவரை

சந்திராஷ்டமம்
அத்தம்.

வளவன்

**மேஷம்**: எதிர்பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்,பணியில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், கனவுப் பலிதமுண்டு.

**ரிஷபம்**: விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்**: இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு.

**கடகம்**: குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**: ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருங்கால நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கன்னி**: குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்**: சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்,குடும்பத்தினரிடையே மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்**: திட்டமிட்ட காரியங்கள் திட்டமிட்ட படியே கைகூடும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் புகழ்கூடும், ஆரோக்கியமான நாள்.

**தனுசு**: கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், நெடுநாளைய கனவுகள் நனவாகலாம்.

**மகரம்**: பொது வாழ்வில் மதிப்பும் மரியதையும் உயரும் நாள், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கும்பம்**: நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்ப பொறுப்புக்கள் கூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

**மீனம்**: சுபகாரிய பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், தொழிலை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.

ஆடம்பரம் அதிகரிக்க அதிகரிக்க வழக்கம் மறைய ஆரம்பிக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர். இராசம்மா இராசையா அவர்களின் ஞாபகார்த்தப் பேருந்து தரிப்பிடம் , கே.கே. எஸ் வீதி இணுவிலில் கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

# பயிர் அழிவைத் தடுக்க குளங்களைப் புனரமைத்துத் தாருங்கள்

## கிராம மட்ட பொது அமைப்புக்கள்

(சாவகச்சேரி)

**தென்மராட்சிப் பிரதேசத்தில் வருடாவருடம் ஏற்படுகின்ற வயல் அழிவைத் தடுக்க குளங்களை புனரமைத்து, வெள்ள வாய்க்கால்களும் சீர் செய்யப்பட வேண்டும் என கிராம மட்ட பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.**

அண்மையில் தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போதே மேற்படி கோரிக்கையை முன்வைத்திருந்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

தென்மராட்சியில் பெரும் போக நெற்செய்கையின் போது நெற்பயிர்கள் அழிவடைய வெள்ள அனர்த்தம் மிகப் பிரதானமான காரணமாக அமைந்து காணப்படுகின்றது.

பயிர் அழிவைத் தடுக்க குளங்கள் புனரமைக்கப்பட்டு, வாய்கால்களும் சீர்செய்யப்பட வேண்டும்.

தென்மராட்சியின் பாலாவி மற்றும் கெற்பேலிப் பகுதியில் யுத்த காலத்தின் போது இராணுவத்தால் அமைக்கப்பட்ட மண் அரண்களால் சில வெள்ள வாய்க்கால்கள் மூடப்பட்டுள்ளன.

இதனால் அப்பகுதி வயல்கள் வருடாவருடம் அழிவைச் சந்திக்கின்றன என மேலும் தெரிவித்தனர்.

தென்மராட்சியில் 398 பதிவு செய்யப்பட்ட குளங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-30)



வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனால் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளராக (திட்டமிடல்) திருமதி ராஜினி ஜெயராஜ் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதத்தை ஆளுநர் நேற்று செவ்வாய்க்கிழமை வழங்கி வைத்தார். ஆளுநர் செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவரின் செயலாளர் சி.சத்தியசீலனும் கலந்து கொண்டார்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 350 | 200 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 250 | 200 | 200 | 350 |
| தக்காளி | 200 | 200 | 250 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 300 | 200 |
| கோவா | 180 | 180 | 200 | 200 |
| கரட் | 150 | 300 | 300 | 300 |
| பூசணி | 60 | 60 | 100 | 60 |
| புடோல் | 120 | 200 | 150 | 300 |
| வாழைக்காய் | 120 | 120 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 300 | 250 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 150 | 160 |
| பாகற்காய் | 500 | 500 | 400 | 500 |
| வெண்டக்காய் | 150 | 250 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 350 | 300 | 250 | 350 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 200 | 220 | 250 | 250 |
| பீற்றூட் | 150 | 120 | 150 | 160 |
| கறிமிளகாய் | 300 | 350 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 300 | 200 |
| போஞ்சி | 450 | 600 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 180 | 150 | 300 | 180 |
| கீரை - 1 பிடி | 140 | 60-120 | 150 | 100 |
| தேசிக்காய் | 1500 | 1400 | 1000 | 2500 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 160-220 |
| இராசவள்ளி | 800 | 800 | 1000 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 400 | 400 |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 60 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 100 | 100 | 240 |

# வல்வெட்டித்துறையில் வீடு கையளிக்கும் நிகழ்வு



(கரணவாய்)

கரவெட்டி பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட வல்வெட்டித்துறைப் பகுதியில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரின் ஒரு மில்லியன் ரூபாய் நிதிப் பங்களிப்பில் அமைக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வு கடந்த 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர் சந்திரகுமார் கருணரூபன் ஆகியோரினால் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கரவெட்டி பிரதேச செயலாளர் திருமதி உமாமகள் கிராம அலுவலர் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (8-60)

## செல்லப்பா சுவாமி குருபூசை


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் தேரடிச் சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு இன்று புதன்கிழமை நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்று, திருமுறை நற்சிந்தனைப் பாடல்கள் ஓதப்படும்.

தொடர்ந்து 'சத்துரு ஜயம்' எனும் பொருள் பற்றி யாழ்ப்பாணப் பல்கலைக் கழக சமஸ்கிருதத்துறைத் தலைவர் பேராசிரியர் ம.பாலகைலாசநாதக் குருக்கள் உரையாற்றவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி, துன்னாலை அருள்மிகு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தில் சமுத்திரத் தீர்த்தத் திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை வங்கக்கடலில் பல்லாயிரக்கணக்கான பக்த அடியவர்கள் புடைசூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது.

## பரிசளிப்பு விழா

யா/ ஊரெழு கணேச வித்தியாசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இ. ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறவுள்ள இவ் விழாவில் பிரதம விருந்தினராக வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் உதவிச் செயலாளர் திருமதி. ராஜமல்லிகை சிவசுந்தர சர்மா, சிறப்பு விருந்தினர்களாக கோப்பாய் கல்விக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் கு. கண்ணதாசன் மற்றும் வலி கிழக்கு பிரதேச சபையின் உரும்பிராய் உப அலுவலக பொறுப்பதிகாரி சி. சைலேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக யாழ் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் து. துசியந்தன், யாழ்ப்பாணம் பிரசாத் நகைக் கடை உரிமையாளர் ச. உதயகுமார் மற்றும் பாடசாலை பழைய மாணவர் லா. நடராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# கிளிநொச்சிக் குளத்தில் பரவும் நீர்த்தாவரங்கள்



(கண்டாவளை)

கிளிநொச்சிக் குளத்தில் தற்போது ஆகாயத்தாமரை மற்றும் சல்பீனியா போன்ற நீர்த்தாவரங்கள் வேகமாகப் பரவி வருகின்றன.

இதனால் குளத்தின் நீர் மாசடைவதுடன் பல்வேறு பாதிப்புக்களையும் எதிர்நோக்குவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக இக் குளத்தினை நம்பி வாழும் நன்னீர் மீன்பிடித் தொழிலாளர்கள் மீன்பிடித் தொழிலை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கிளிநொச்சி மாவட்டத்திற்கான குடிநீர் விநியோகம் இக் குளத்தில் இருந்தே மேற்கொள்ளப்படுகின்றன.

இயற்கை அழகுடன் கூடிய சுற்றுலாத்தளமாகவும் காணப்படுகின்ற இக்குளத்தில் நீர்த்தாவரங்கள் பாதிப்பை ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் இதனை அகற்றித்தருமாறு பொதுமக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (8-315)

## அறிவுத்திருக்கோவிலில் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மண்ணில் மீண்டும் சொல்வேந்தர் சுகிசிவம் அவர்களின் சொற்பொழிவு எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் அறிவுத்திருக் கோவிலில் நடைபெறவுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ள முடியுமென தெரிவித்துள்ளனர். (3)

# உணவுப் பொதிக்குள் வைத்து கஞ்சா கடத்த முற்பட்டவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குள் உணவு பொதிக்குள் மறைத்து கஞ்சா மற்றும் ஹெரோயின் போதைப் பொருளைக் கடத்த முற்பட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் போதைப் பொருள் தொடர்பிலான குற்றச்சாட்டில் யாழ்ப்பாண சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரைப் பார்வையிட வந்த அவரின் மனைவி, உணவுப் பொதிக்குள் 5 மில்லிக்கிராம் ஹெரோயின் போதைப் பொருளை மறைத்து வைத்து சிறைச்சாலைக்குள் கடத்த முற்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை யாழ்ப்பாணம் புன்னாலைக்கட்டுவன் பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள நிலையில் அவரைப் பார்வையிட வந்த நண்பரான இளைஞன் ஒருவர் , 5 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் சிறு தொகை கஞ்சா ஆகியவற்றை உணவுப் பொதிக்குள் மறைத்துக் கடத்த முற்பட்ட நிலையில் அவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் குறித்த இருவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (8-33)


## சாவகச்சேரி நகராட்சி மன்றம் நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் நடுக்கட்டு உத்தியோகத்தர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் சாவகச்சேரி நகராட்சிமன்ற எல்லைக்குள் வசிப்பவராகவும் இலங்கைப் பிரஜையாகவும் இருத்தல் வேண்டும். விண்ணப்பத்தினையும் மற்றும் தகைமைகள் சேவை நிபந்தனைகள் தொடர்பான விபரத்தினையும் 15.10.2025 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை இந்நகராட்சிமன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- இப்பதவி முற்றிலும் தற்காலிகமானது.
- இப்பதவிக்கு குறித்துரைக்கப்பட்ட வேதனமோ அல்லது படிகளோ வழங்கப்படமாட்டாது.
- அறவிடப்படும் ஆதனவரி வருமான நிலுவைத் தொகையின் 20% தரகுப்பணம் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை 22.10.2025 அன்று அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு "செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி" என்னும் முகவரிக்கு பதிவுத்தபால்மூலம் அல்லது நேரடியாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தவிசாளர்,**
**நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**


# இந்தியப் பிரதம நீதியரசர் மீது பாதணி வீசிய சட்டத்தரணி

## இந்து மதத்தை அவமதித்ததாக குற்றச்சாட்டு

(டில்லி)

இந்தியப் பிரதம நீதியரசர் பி. ஆர் கவாய், இந்து மதம் குறித்து கூறிய கருத்துகளால் கோபமடைந்த இந்திய சட்டத்தரணி ஒருவர், அவர் மீது பாதணியை வீசியுள்ளார்.

நேற்று முன்தினம் டில்லியில் நடந்த நீதிமன்ற நடவடிக்கைகளின் போது ராகேஷ் கிஷோர் என்ற சட்டத்தரணி, இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளார்.

இந்த சம்பவம், இந்தியா முழுவதும் கடுமையான பொது அவமதிப்பு மற்றும் பாதுகாப்பு மீறலாகக் கருதப்படுகிறது.

நீதிமன்ற அறையிலிருந்த மூன்று சட்டத்தரணிகள், பிரதம நீதியரசர் மீது ஒரு பாதணி வீசப்பட்டதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து பாதுகாப்பு அதிகாரிகளால் நீதிமன்ற அறையிலிருந்து அழைத்துச் செல்லப்பட்டபோது, இந்து மதத்தை அவமதிப்பதை இந்தியா பொறுத்துக்கொள்ளாது என, தாக்குதல் நடத்திய சட்டத்தரணி கிஷோர், கோசம் எழுப்பியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பின்னர் அவர் பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இந்தநிலையில், சம்பவத்தின் பின்னர், பிரதம நீதியரசர் கவாய் அமைதியாக இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், அவர் இந்த விவகாரம் குறித்து பகிரங்கமாக கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

அதேநேரம், தாக்குதல் நடத்திய சட்டத்தரணி கிஷோர் மீது எந்த குற்றச்சாட்டும் பதிவு செய்யப்படாது என்று இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கண்டனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பாகிஸ்தானின் அரிய வகை கனிமங்களுடன் அமெரிக்கா புறப்பட்ட கப்பல்



(இஸ்லாமாபாத்)

வர்த்தக வரி ஒப்பந்தம் தொடர்பாக இந்தியா - அமெரிக்கா இடையிலான உறவில் சற்று விரிசல் ஏற்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி அமெரிக்காவுடன் பாகிஸ்தான் நட்பு பாராட்டி வருகிறது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பாகிஸ்தான் பிரதமர் மற்றும் இராணுவ தலைமை தளபதி ஆகியோரை வெள்ளை மாளிகைக்கு வரவேற்று விருந்து அளித்தார். பாகிஸ்தான் தற்போது கடுமையான நிதிப்பற்றாக் குறையால் தத்தளித்து வருகிறது.

இதை ட்ரம்ப் சரியாக பயன்படுத்திக் கொள்ள விரும்புகிறார். பாகிஸ்தானில் உள்ள அரிய கனிம வளங்களை அமெரிக்கா வெட்டி எடுத்துக்கொள்ள விரும்பினார். இது தொடர்பாக பாகிஸ்தான் பிரதமரிடம் பேசினார். அவரும் சம்மதம் தெரிவித்ததாக தெரிகிறது.

. கடந்த முறை அமெரிக்கா சென்றபோது, பாகிஸ்தானில் உள்ள அரியவகை கனிமங்களின் மாதிரிகளை ட்ரம்பிடம் காண்பித்துள்ளார் ஷெபாஷ் ஷெரீப்.

இதனைத் தொடர்ந்து 500 மில்லியன் டொலருக்கு பாகிஸ்தானுக்கும், அமெரிக்க நிறுவனத்திற்கும் இடையில் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் வெட்டி எடுக்கப்பட்ட கனிம வளங்கள் அடங்கிய முதல் கப்பல் பாகிஸ்தானில் இருந்து அமெரிக்கா புறப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு கனிம வளங்களை விற்பனை செய்வதற்கு இம்ரான் கான் கட்சி கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. அமெரிக்காவுடன் இரகசிய ஒப்பந்தம் எனக் குற்றம்சாட்டியுள்ளது. (நி)

## மின் சிகரெட் பயன்பாடு அதிகரிப்பு எச்சரிக்கும் உலக சுகாதார ஸ்தாபனம்

(ஜெனீவா)

தற்போது மின் சிகரெட்டுக்களை பயன்படுத்தும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

சுமார் 15 மில்லியன் சிறுவர்கள் உட்பட 100 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் மின் சிகரெட்டுகளைப் பயன்படுத்துகின்றனர்.

இது நிக்கோடின் எனும் போதைப்பொருளின் புதிய அலையைத் தூண்டுவதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

உலகளாவிய புள்ளி விவரங்களின் அடிப்படையில், சிறுவர்கள், சராசரியாக, பெரியவர்களை விட 9 மடங்கு அதிகமாக மின் சிகரெட்டுக்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆபிரிக்கா மற்றும் தென்கிழக்காசிய நாடுகள் சிலவற்றின் தரவுகளின்படி, மின் சிகரெட்டுக்களை பயன்படுத்தும் மக்களின் எண்ணிக்கை சராசரியாகப் புள்ளிவிபரப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த வருடம் பெப்ரவரி மாத நிலவரப்படி, குறைந்தது 86 மில்லியன் மின் சிகரெட் பயனர்கள் காணப்படுவதாக அறியப்பட்டுள்ளது. (நி)



## இஸ்ரேலின் தா

## எகிப்தில் காசா

(கெய்ரோ) ••••••••••

போர் நிறுத்த எதிர்பார்ப்புக்கு

காசாவில் இஸ்ரேலின் சர

தல்கள் தொடர்வதோடு கா

முடிவுக்குக் கொண்டுவருவ

படுத்தும்படி அனைத்துத் தர

அமெரிக்க ஜனாதிபதி டொன

வலியுறுத்தியுள்ளார்.

காசாவில் போர் நிறுத்தத்திற்கு ட்ரம்ப் முன்வைத்த 20 அம்சத் திட்டத்தின் சில அம்சங்களுக்கு ஹமாஸ் அமைப்பு இணக்கத்தை வெளியிட்டிருக்கும் நிலையில் இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் அமைப்புக்கு இடையிலான மறைமுக போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் எகிப்து தலைநகர் கெய்ரோவில் இடம்பெற்று வருகின்றன.

காசா நகரின் கிழக்கே சுஜையா பகுதியில் இஸ்ரேலிய இராணுவம் நேற்று முன்தினம் காலை தாக்குதல்களை நடத்தி இருப்பதோடு, நுஸைரத் மற்றும் அல் புரைஜ் உட்பட மத்திய காசாவில் பல அகதி முகாம்கள் மீதும் தாக்குதல்கள் இடம் பெற்றிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. தெற்கு காசாவின் கான் யூனிஸ் நகரிலும் தாக்குதல் இடம்பெற்றிருப்பதோடு தெற்கே வதி காசாவில் உதவி நாடிச் சென்ற பாலஸ்தீனர்கள் மீது

## பாகிஸ்தானில் புகையிரதம் மீது வெடிகுண்டுத் தாக்குதல்

### 6 புகையிரதப் பெட்டிகள் தடம்புரள்வு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் சிந்து - பலுசிஸ்தான் எல்லைக்கு அருகில் உள்ள சுல்தான் கோட் பகுதிக்கு அருகே குவெட்டா செல்லும் ஜாஃபர் எக்ஸ்பிரஸ் எனும் விரைவு புகையிரதத்தை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து புகையிரதங்களை இலக்கு வைத்து தொடர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் குறித்த புகையிரதத்தில் பயணித்தமையினால் இந்தப் புகையிரதம் இலக்கு வைக்கப்பட்டதாகவும் இந்த குண்டுவெடிப்பில் புகையிரதத்தில் 6 பெட்டிகள் தடம் புரண்டதாகவும் பலர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...தாக்குதல் தொடரும் நிலையில்

# ...போர் நிறுத்தப் பேச்சுவார்த்தை

...கு மத்தியிலும்
...ரமாரி தாக்கு
...காசா போரை
...வதை விரைவு
...ரப்புகளையும்
...னால்ட் ட்ரம்ப்



இஸ்ரேலியத் துருப்புகள் சூடு நடத்தியுள்ளன.

காசா நகரைக் கைப்பற்றும் தரைவழிப் படை நடவடிக் கையை முன்னெடுத்துவரும் இஸ்ரேலிய இராணுவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கடு மையான குண்டுத் தாக்குதல் களை நடத்தியதாகக் குடியிருப் பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் குறைந்தது 21 பாலஸ்தீனர்கள் கொல்லப் பட்டு மேலும் 96 பேர் காயமடைந்திருப்பதாகக் காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த 2023 ஒக்டோபர் 7ஆம் திகதி பாலஸ்தீன போராளிகள் இஸ்ரேல் மீது நடத்திய தாக்குதலை அடுத்து வெடித்த காசா போருக்கு இன்றுடன் இரண்டு ஆண்டுகள் எட்டும் நிலையில் இந்தப் போரில் கொல்லப்பட்ட பாலஸ்தீனர்கள் எண் ணிக்கை 67,160 ஆக அதி கரித்திருப்பதோடு மேலும் 169,679 பேர் காயமடைந் துள்ளனர்.

இரண்டு ஆண்டுகள் நீடிக்கும் போரில் காசா பகுதி இடிபாடுகளாக மாற்றப்பட்டு அந்தப் பகுதியில் பாரிய மனிதாபிமான நெருக்கடி ஒன்று ஏற்பட்டிருக்கும் நிலையில் இந்தப் போர் முடிவுக்கு வரும் எதிர் பார்ப்பு பாதிக்கப்பட்டிருக்கும் பாலஸ்தீனர்கள் இடையிலும் அதிகரித்துள்ளது. ஹமாஸ் மற்றும் இஸ்ரேலிய பிரதி நிதிகளுடன் அமெரிக்க பிரதி நிதிகளும் கெய்ரோவில் நடைபெறும் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தையில் பங் கேற்றுள்ளனர்.

இதன்போது தற்காலிக போர் நிறுத்தம் ஒன்றுக்கான திகதியை தீர்மானிப்பது மற்றும் முதற்கட்டப் போர் நிறுத்தத்திற்கான நிபந்த னைகள் தொடர்பில் இந்தப் பேச்சுவார்த்தையில் அவ தானம் செலுத்தப்பட்டுள் ளது. போர் நிறுத்தத்திற் கான முக்கிய நிபந்தனைக ளில் ஒன்றாக காசாவில் உள்ள 47 இஸ்ரேலிய பணயக் கைதிகள் மற்றும் இஸ்ரேலிய சிறைகளில் இருக்கும் பாலஸ்தீன கைதி களுக்கு இடையிலான கைதிகள் பரிமாற்றம் அமையவுள்ளது.

ட்ரம்ப் சமூக ஊடகத்தில் வெளியிட்டிருக்கும் பதிவில் "மிக வெற்றிகரமானதாக உள்ளது" என்று தெரிவித் துள்ளார். "முதல் கட்டம் இந்த வாரத்திற்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்று கூறியிருப்பதோடு வேகமாக செயற்படும்படி அனைவரையும் நான் கோரியிருக்கிறேன்" என்று போர் நிறுத்தப் பேச்சு வார்த்தை குறித்து ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

எனினும் ட்ரம்பின் போர் நிறுத்தத் திட்டத்தில் குறிப் பிடப்பட்டிருக்கும் ஆயுதங் களை களையும் நிபந்த னைக்கு ஹமாஸ் அமைப்பு இணக்கத்தை வெளியிட் டிருக்கவில்லை என்பதோடு காசாவில் இருந்து படை களை வாபஸ் பெறுவதில் இஸ்ரேல் இன்னும் ஆத ரவை வெளியிடாத நிலை யில் போர் நிறுத்தப் பேச்சு வார்த்தையில் தீர்வு காணப்பட வேண்டிய முக் கிய அம்சங்கள் பல உள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

றது.

இதேவேளை, குறித்த குண்டுவெடிப்பு தாக்குதலுக்கு பலுச் கிளர்ச்சிக் குழுவான பலுச் குடியரசுக் காவற்படை, பொறுப் பேற்றுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

இதேவேளை, பலுசிஸ்தான் சுதந்திரம் பெறும் வரை இது போன்ற தாக்குதல் நடவடிக்கை கள் தொடரும் எனத் தாக்குத லுக்கு பொறுப்பேற்ற பலுச் குடியரசுக் காவற்படை அறிவித் துள்ளது. (நி)



# ட்ரோன் தாக்குதலால் பற்றி எரிந்த ரஷ்யாவின் எண்ணெய் நிலையம்

(மொஸ்கோ)

ரஷ்யாவுக்கும், உக்ரை னுக்கும் இடையில் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேலாக சண்டை நடைபெற்று வரு கிறது. அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பல முறை போர் நிறுத்த பேச்சு வார்த்தையை முன்னெடுத் தார். ரஷ்யா பேச்சுவார்த் தைக்கு இணங்காததால், சண்டை நீடித்து வருகிறது.

தற்போது ட்ரோன்கள் மூலம் இரு நாடுகளும் மாறிமாறி தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த நிலை யில் நேற்று ரஷ்யாவின் முக்கியமான எண்ணெய் நிலையம் மற்றும் வெடி பொருள் தொழிற்சாலையை ட்ரோன் மூலம் தாக்கியதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

மேற்கு ரஷ்யாவில் உள்ள நிஸ்னி நோவ் கோரோடு மாகாணத்தில் உள்ள ஸ்வெர்ட்லோவ் வெடி பொருள் தொழிற் சாலை தாக்கப்பட்டதாக உக் ரைன் ஜெனரல் ஸ்டாஃப் தெரிவித்துள்ளார். அங்கு வெடிச்சத்தம் கேட்டதாகவும், தீப்பிடித்து எரிந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

ரஷ்யப் படைகளுக்கு வெடிபொருட்கள் வழங்கும் முக்கிய தொழிற்சாலைக ளில் ஒன்றாக இந்த தொழிற் சாலை திகழ்ந்து வருகிறது. கிரீமியாவில் உள்ள எண் ணெய் நிலையத்தையும் ட்ரோன் தாக்கியதாவும், இதனால் தீ கொழுந்து விட்டு எரிந்ததாகவும் தெரி வித்துள்ளார். கிரீமியா உட்பட 14 மாகாணத்தில் உக்ரைன் ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தியதை ரஷ்யா ஒப்புக்கொண்டுள் ளது.

251 ட்ரோன்கள் வான் பாதுகாப்பு சிஸ்டம் மூலம் தடுத்து அழிக்கப்பட்டதாக தெரிவித்த ரஷ்யா, போர் தொடங்கிய பிறகு உக்ரை னின் மிகப் பெரிய ட்ரோன் தாக்குதல் இதுவாகும் என வும் தெரிவித்துள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒக்டோபர் மாத இராசி பலன்கள்

## எதையும் திட்டமிட்டு செய்வது நல்லது!



**கிரகநிலை** - இராசியில் சனி, ராகு - பஞ்சம ஸ்தானத்தில் குரு - களத்திர ஸ்தானத்தில் சுக்கிரன், கேது - அஷ்டம ஸ்தானத்தில் சூரியன் - பாக்கிய ஸ்தானத்தில் செவ்வாய், புதன் எனக் கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் காரிய தாமதம் நீங்கும். அடுத்தவரை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காமல் இருப்பது நன்மை தரும்.

பாதியில் நின்ற பணிகள் மீண்டும் தொடங்குவதற்கு முயற்சிகளை மேற்கொள்வீர்கள். எதையும் திட்டமிட்டு செய்வது நல்லது.

குடும்பத்தில் இருப்பவர்களால் சந்தோஷமான மனநிலை உருவாகலாம். கணவன், மனைவி ஒருவரை ஒருவர் மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நன்மை தரும். நெருக்கடியான நேரத்தில் உறவினர்கள், நண்பர்கள் உங்களுக்கு உதவி புரிவார்கள்.

மனதில் நிலையான எண்ணம் இருக்காது. பண நெருக்கடி குறையும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கலை சந்திக்க வேண்டி இருக்கலாம். ஓடர்கள் மற்றும் பொருட்களை விநியோகம் செய்வதில் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கூடுதல் பணி சுமையை ஏற்க வேண்டியிருக்கும். முக்கிய பொறுப்பு கிடைக்கலாம். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளை சிறப்பாக செய்து முடிப்பீர்கள்.

பெண்களுக்கு தன்னம்பிக்கை அதிகரிக்கும். பயணங்கள் மூலம் காரிய அனுகூலம் உண்டாகும். கலைத் துறையினருக்கு மனத் துணிவு அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு இடமாற்றம், பதவி இறக்கம் ஆகியவற்றை சந்திக்க வேண்டி இருக்கும். மாணவர்களுக்கு கல்விக்கான செலவு உண்டாகும். கல்வியில் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை அதிகரிக்கும்.

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் பல விதமான துறைகளில் முன்னேற்றம் கிடைக்கும். தெய்வ அனுகூலம்




கிடைக்கும். பொருளாதார வளம் சிறப்படையும். காரிய அனுகூலம் கிட்டும். செல்வாக்கில் முன்னேற்றம் ஏற்படும். உங்கள் முயற்சிகளில் தடைகள் ஏற்பட்டாலும் அதை முறியடிக்கும் வல்லமை கிடைக்கும்.

**சதயம்:** இந்த மாதம் நல்ல விடயங்களை தள்ளிப் போட வேண்டாம். வீடு, மனை, ஆடை, ஆபரணங்கள் போன்ற விடயங்களில் அவசரம் வேண்டாம். எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து முடிவெடுக்கவும். தாயார் மற்றும் தாய் வழி உறவினர்களுடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புண்டு.

**பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் கடமைகளை நிறைவேற்றிக் கொள்ள சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்வீர்கள். சுபகாரிய விடயமாக வெளியூர் செல்ல நேரிடலாம்.

கணவன் மனைவிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் முடிவுக்கு வரும். வீடு மாற்றிக் கொள்ள விரும்புபவர்கள் மாற்றிக்கொள்ளத்தக்க தருணம் வந்து சேரும். புதிய வாகனம் வாங்கும் யோகம் வந்து சேரும்.

**பரிகாரம்:** சனிக்கிழமை அன்று விநாயகருக்கு அறுகம் புல் சாற்றி வழிபட்டு வர கடினமான பணிகளும் எளிதாகும். மனோ தைரியம் அதிகரிக்கும்

**சந்திராஷ்டம தினங்கள்:**
19, 20, 21

**அதிஷ்ட தினங்கள்:**
02, 03, 29, 30

## குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும்!



**கிரகநிலை** - சுக ஸ்தானத்தில் குரு - ரண ருண ரோக ஸ்தானத்தில் சுக்கிரன், கேது - களத்திர ஸ்தானத்தில் சூரியன் - அஷ்டம ஸ்தானத்தில் செவ்வாய், புதன் - அயன சயன போக ஸ்தானத்தில் சனி, ராகு எனக் கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் பல யோகங்கள் உண்டாகும். நினைத்த காரியத்தை செய்து முடிப்பதில் வேகம் காட்டுவீர்கள். புத்தி சாதுரியத்தால் எந்த தடைகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். எந்த ஒரு பிரச்சினையையும் துணிச்சலுடன் எதிர்கொள்வீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். உறவினர், நண்பர்கள் மத்தியில் மதிப்பு உயரும். வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கூடுதல் இலாபம் கிடைக்கப் பெறுவீர்கள்.

தொழில் வியாபாரத்தை விரிவாக்கம் செய்ய முயற்சிகளை மேற்கொள்வீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.

சிலருக்கு புதிய பதவி, கூடுதல் பொறுப்புகள் கிடைக்கலாம். கடுமையாக உழைக்க வேண்டி இருக்கும். அலுவலகத்தில் அடுத்தவர்களால் திடீர் பிரச்சினைகள் தலை தூக்கலாம்.

உங்களது கருத்துக்கு மாற்று கருத்து உண்டாகலாம். பெண்களுக்கு திறமையான பேச்சின் மூலம் சாதகமான பலன் கிடைக்கும்.

மனதில் இருந்த சோர்வு நீங்கி உற்சாகம் உண்டாகும். கலைத் துறையினருக்கு கடன் விவகாரங்கள் கட்டுக்குள் இருக்கும். வீண் அலைச்சலை சந்திக்க வேண்டி இருக்கும்.

அரசியல்வாதிகள் கோபமாக பேசுவதை தவிர்ப்பது நல்லது. மேல்மட்டத்தில் உள்ளவர்களுடன் வாக்குவாதங்கள் ஏற்படலாம். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் அடைய முழு முயற்சியுடன் படிப்பீர்கள். சக மாணவர்கள் மத்தியில் மதிப்பு உயரும்.

**பூரட்டாதி 4ஆம் பாதம்:** இந்த மாதம் வீண் பழி சுமத்தி




உங்களை விட்டுப் பிரிந்து சென்ற உறவினர்கள் மற்றும் நண்பர்கள் மீண்டும் உங்களிடம் வந்து சேர்வர். இலக்கியம், கதை, கவிதைத் துறைகளில் உள்ளவர்களுக்கு புகழ் கிடைக்கும். வேலையாட்கள் மூலம் சில தொந்தரவுகள் நேரிடலாம்.

**உத்திரட்டாதி:** இந்த மாதம் பணத்தை விட அறிவை மூலதனமாக வைத்து செய்யப்படும் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். அதே நேரம் சில புதிய வியாபார யுக்திகளை நீங்கள் பயன்படுத்த வேண்டி வரும். தீவிர முயற்சிகளினாலேயே அரசு சார்ந்த காரியங்கள் நடைபெறும்.

**ரேவதி:** இந்த மாதம் உழைப்புக்கு ஏற்ற இலாபம் கிடைக்கும். தொழில் நிமித்தமாக நீண்டதூரம் பயணம் செல்ல வேண்டி வரும்.

எதிரிகள் வகையில் அசட்டையாக இருத்தல் கூடாது. புதிய முதலீடுகளின் போது ஆலோசனைகள் அவசியமாகிறது. பண விடயத்தில் தொடர்ந்து அக்கறை தேவை.

**பரிகாரம்:** வியாழக்கிழமைகளில் குருபகவானுக்கு கொண்டைக்கடலை மாலை சாற்றி அர்ச்சனை செய்ய எதிர்பார்த்த பண வரத்து கிடைக்கும். மன மகிழ்ச்சி ஏற்படும்.

**சந்திராஷ்டம தினங்கள்:**
22, 23

**அதிஷ்ட தினங்கள்:**
04, 05, 31

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உற்பத்தியானதை வீணாக்குவதும் உணவை கழிவாக்குவதும் முறையல்ல மக்காள்!

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

பாலஸ்தீனத்தின் காசா என்னுமிடத்தில் ஒரு வேளை உண்ணுவதற்கேனும் உணவில்லையென அலைந்து திரியும் மக்களை, குழந்தைகளை, தாய்மாரை பார்த்தேனும் நாம் உணவினை வீணாக்குவதனையும் கழிவாக எறிவதனையும் இயன்றவரை தவிர்க்க வேண்டும். பாலஸ்தீனத்தில் நடைபெறும் இந்த உணவு அவலம் எமது பிரதேசத்திலும் போரின் இறுதி நாட்களில் நடைபெற்றாலும் நீண்ட போர் நடந்த காலப்பகுதியில் உணவுற்பத்திக்கான கட்டமைப்பு நிறைவாகவே வடபகுதியெங்கும் மேற்கொள்ளப்பட்டு அனைவருக்கும் உணவு கிடைத்ததை நாம் நினைவில் கொள்ளலாம். கிடைக்கின்ற, இருக்கின்ற வளங்களைப் பயன்படுத்தி அவற்றுள் சூழலுக்கியைவான தொழில்நுட்பங்களை உட்புகுத்தி எம்மக்கள் உணவுற்பத்தி செய்து வாழ்ந்தனர் என்னும் கதை பாடமாக இனிவரும் சந்ததிக்கு சொல்லப்படல் வேண்டும். பொருளாதார தடையின் ஓரங்கமாக மக்களுக்கான உணவு வழங்கலில் தடையை ஏற்படுத்திய போதும் உள்ளூர் பொறிமுறை மக்களை உள்ளூர் உற்பத்தியில் கவனஞ் செலுத்த வைத்த காரணத்தால் பலவுயிர்கள் காப்பாற்றப்பட்டன என்பதனை வாழ்ந்துணர்ந்து கண்டவர்கள் அறிவார்கள்.

உலக உணவு ஸ்தாபனத்தின் தகவலின் படி 2024இல் 638 இலிருந்து 720 மில்லியன் மக்கள் பசி பட்டினியை எதிர்நோக்கியதாக பதிவாகியிருக்கின்றது என்றால் உலக சனத்தொகையில் 12 பேருக்கு ஒருவர் வீதம் பட்டினி அவலத்தினுள் வாழ்ந்திருக்கின்றனர். இந்த புள்ளி விபரங்கள் 2025இற்கும் பெரியளவில் மாறுபட்டிருக்க வாய்ப்பில்லை. ஆதலால் இவ்வருடத்திற்கும் இது பொருந்தும். 2024இல் 2.6 பில்லியன் மக்கள் நிறைவான சமனான உணவை உண்ண முடியவில்லை என்பதுடன் 2.3 பில்லியன் மக்கள் தேவையான ஊட்டச்சத்துள்ள உணவை உண்ணக் கிடைக்கவில்லை. இது உலக சனத்தொகையில் 28 சதவீதம் என்றால் பாருங்களேன். இந்த பட்டினி அவலம் பலவித சிரமங்களை எதிர்நோக்கி உற்பத்தி செய்யும் உணவினை நாம் கவனக்குறைவாலும் தொழில்நுட்ப வசதியின்மையாலும் கழிவுகளாக்கி அவற்றை எமது சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் வகையில் வீசுகின்றோம். உணவை வீணாக்குவதால் ஒரு வேளை உணவுக்கென அலையும் குழந்தைக்கு உணவளிக்க முடியும் என்பதனை நாம் கவனிக்கத் தவறி விடுகின்றோம்.

உலக உணவு ஸ்தாபனத்தின் செய்தியின் படி உற்பத்தியான உணவு விளைநிலத்திலிருந்து சிறுவர்த்தகர்களை சென்றடைவதற்கிடையில் அந்த வழங்கல் சங்கிலியில் (supply chain) உணவில் ஏறக்குறைய 13 சதவீதமான விளைச்சல் வீணாகின்றது என கணக்கிட்டுள்ளனர். பின்னர் சிறுவர்த்தகர்களிலிருந்து உணவு விற்பனை நிலையங்களுக்கும் வீடுகளுக்கும் சென்றடைவதற்கிடையில் விளைச்சலில் 19சதவீதம் வீணாகின்றது எனவும் கணிக்கப்பட்டுள்ளது. ஆக மொத்தத்தில் 32 சதவீதமான விளைச்சல் விளைநிலத்திலிருந்து உணவாக உட்கொள்வதற்கிடையில் வீணாகின்றது. கூட்டிக் கழித்துப் பார்த்தால் 1.25 பில்லியன் தொன்கள் உணவு விளைநிலத்திலிருந்து சிறுவர்த்தகக் கடைகளுக்கு செல்லும் வழங்கல் பாதையிலேயே வீணாக்கப்படுகின்றது என்றும் 1.05 பில்லியன் தொன்கள் உணவு கழிவாக ஆக்கப்படுகின்றதென்றும் கணிப்பிட்டிருக்கின்றார்கள். இதில் வீட்டுக்கழிவாக




60சதவீதமான உணவு விரயமாக்கப்படுகின்றது என்றால் நீங்களும் நாங்களும் தான் இதில் சம்மந்தப்பட்டிருக்கின்றோம் என்றாகுதல்லவா. உற்பத்திப் பொருட்கள் வழங்கல் சங்கிலியில் விரயமாக்கப்படுவதனாலும் உணவு கழிவாக மாற்றப்படுவதனாலும் 8சதவீத பங்கு பச்சை வீட்டு வாயு உற்பத்தியை ஏற்படுத்துகின்றது என கூறப்பட்டுள்ளது.

உணவு விரயமாக்குதல் என்பது நாம் செய்யும் பாவமாக கருதப்படல் வேண்டும். இது அனைவருக்கும் பொதுவான விதியாகவும் விரயமாக்கும் எவருக்கும் தண்டனை தீர்வாகவும் வேண்டும். எட்டயபுரத்து முண்டாசுக் கவி பாரதி யின் அறைகூவல் இன்னும் உலகெங்கும் ஒலித்துக் கொண்டேயிருக்கின்றது. தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினையே அழித்திடுவோம். இவை அறைகூவலாயினும் கேட்பவர் ஒவ்வொருவரின் உள் மனதையும் நெருடிச் செல்லவேண்டும்.

உணவில்லையென ஒரு பச்சிளம் குழந்தை தவிக்கும் தவிப்பை மாண்புள்ள எவரும் தாங்கமாட்டார்கள். அதனையே எமக்கானதாகும் போது விரயமாக்க மனம் இடந்தராது. உணவகங்கள் பலவற்றில், தற்போது சுய பரிமாறல்கள் (Self-serving) முறைமை வந்திருப்பது வரவேற்கத்தக்கது. அதேபோல பரிமாறும் உணவுகளை உண்பவர்களுக்கான தேவைவ்யை உணர்ந்து அளவுகளை மட்டுப்படுத்துவதும் உண்டு. ஆனாலும் பல இடங்களில் இன்னமும் அளவுக்கதிகமாக உணவை தயாரித்துவிட்டு அதனை விரயஞ் செய்வதனை தவிர்த்து அவ்வாறான தேவைக்கதிகமாயுள்ள உணவை உண்பதற்காக பல இடங்களில் வசதியற்ற மக்கள் காத்திருக்கின்றனர் என்பதனை அறிந்தால் அவர்களுக்கு அந்த உணவை சுகாதாரமான வழியில் கொண்டு சேர்த்தால் பல உயிர்களின் வயிறு ஒருநேரமாவது நிறைந்துவிடும். உணவை விரயமாக்குவதனை தவிர்த்தும் கழிவுகளாக அவற்றை கொட்டுவதனை தவிர்ப்பதும் அவசியமானது.

உணவு பழுதடைந்து வேறு வழியின்றி கழிவாக உருமாறினால் அவற்றை முறையாக அகற்றுவதற்கு வழிவகைகள் உண்டு. உணவு பழுதடைந்து துர்மணம் வீச ஆரம்பித்தால் எங்களூரிலுள்ள ஒருவகை இலையான் அதனை மொய்க்கத் தொடங்கும். ஓரளவுக்கு பெரிதான உருவமுள்ள கருத்த இலையானின் நுனிக்கால்கள் வெள்ளை நிறமாக இருக்கும் இதனை கறுப்பு படைவீரர் இலையான் என அழைப்பர். இவ்விலையான்கள் அழுகலடையும் உணவில் மொய்த்து விரைந்து முட்டையிடும். முட்டைபொரித்து வெளிவரும் இதனது குடம்பிகள் அழுகலடைந்த உணவில் மொய்த்து அதனை உணவாக்கிவிடும். மரக்கறி உணவாயினும் இறைச்சி மீன் வகையாயினும் இவை அழுகலடையும் போது இக்குடம்பிகள் பெருகி உண்டு விடும். இவற்றின் கழிவுகள் சேதன உரமாக பயன்படுத்துவதுடன் இப் புழுக்களை சுகாதார முறையில் தரம்பிரித்து அதிலிருந்து புரதத்தையும் நொதியங்களையும் பிரித்தெடுத்து மனித பயன்பாட்டுக்காக பயன்படுத்துகின்றார்கள்.



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை, விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

2050 இல் பூச்சிகளிலிருந்து மனிதனுக்கான, விலங்குகளுக்கான புரதம் என்னும் கருப்பொருள் முனைப்புப் பெறுகின்றது. கேட்கும் போது அருவருக்கத்தான் செய்கின்றது ஆனால் பூச்சிகளிலுள்ள புரதத்தை தேடி மனிதன் ஆய்வுக்குள் நுளைந்து பலவிடயங்களுக்கு விடை கண்டுவிட்டான். ஆம் தாவர புரதத்தினால் ஈடுகட்ட முடியாத புரதத்தின் தேவையை பூச்சிகளை வளர்த்து அவற்றிலிருந்து பெற தலைப்பட்டுவிட்டான். ஊட்டச்சத்து எங்கிருந்து பெற்றாலென்ன உண்ணக்கூடியதான நிலையில் அவற்றை உருமாற்றி உணவாக்குவதே தற்கால தேவையின் நிலைப்பாடு என்பதனால் விலங்குப் புரதம் பூச்சிகளுக்குள் ஒளிந்திருக்கும் செய்தி காலவோட்டத்தில் அத்தியாவசிய தேவையாகிவிடும்.

விளைநிலத்திலிருந்து விற்பனை நிலையங்களுக்கு வரும் வரையிலான வழங்கல் சங்கிலியில் உணவு விரயமாவதைத் தடுக்க முறையாக பொதிசெய்தல் மற்றும் அவற்றை முறையாக களஞ்சியப்படுத்தலும் அவசியமாகின்றது. உணவு பதப்படுத்தல், களஞ்சியப்படுத்தல், மதிப்பேற்றஞ் செய்தல், பொதிசெய்தல் என்பனவற்றில் உணவை விரயமாக்குதலை தடுப்பதற்கான தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்திக் கொள்ளல், விவசாயிகளுக்கான அறுவடையின் பின்னரான களஞ்சியப்படுத்தலுக்கான வசதிகளை அந்தந்த இடத்தில் ஏற்படுத்திக் கொடுத்தல், அறுவடை செய்தல் மதிப்பேற்றஞ்செய்தல் என்பனவற்றுக்கான சூழலுக்கியைவான தொழில்நுட்பங்களை விவசாய மக்களுக்கு கிடைக்க செய்தல் என்பன உணவு விரயமாதலையும் கழிவாக கொட்டுவதனையும் வெகுவாக குறைப்பதோடு கழிவாக வருவனவற்றை உள்ளீடாக பயன்படுத்தி அவற்றிலிருந்து சேதன உரம் மற்றும் புரதம் என்பனவற்றை பெறும் தொழில் நுட்பங்களுக்கு முன்னுரிமையும் அங்கீகாரமும் வழங்கப்படல் அவசியமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 880





ருக்கிறேன்!" என்றான் ரவிதாஸன்.

"போன இடத்திலும் ராணியை நீ விடவில்லையா? இங்கே எதற்காக வந்தாய்? யாருக்காவது தெரிந்தால்"

தெரிந்தால் என்ன முழுகிவிடும்? "அப்படிச் சொல்லாதே! சின்னப் பழுவேட்டரையர் எங்கள் பேரில் சந்தேகம் கொண்டிருக்கிறார். என்னை அழைத்து ஒருநாள் கடுமையாக எச்சரித்தார். மறுபடியும் மந்திரவாதி வந்தால் தம்மிடம் வந்து சொல்ல வேண்டும் என்று கட்டளை இட்டிருக்கிறார்."

"அவன் கெட்டான், போ! அவர்களுடைய காலமெல்லாம் நெருங்கிவிட்டது! நீ ஒன்றும் கவலைப்படாதே! நிலவறையின் சாவி வேண்டும் சீக்கிரம் கொண்டு வந்து கொடு!" என்றான் ரவிதாஸன்.

"ஐயையோ! நான் மாட்டேன்!" "இதோ பார், உன் எஜமானியின் மோதிரம்!" என்று ரவிதாஸன் இளைய ராணியின் முத்திரை மோதிரத்தைக் காட்டினான்.

"இதை நீ எங்கே திருடினாயோ, என்னமோ யார் கண்டது?"

"அடி பாவி! என்னையா திருடன் என்கிறாய்? இளைய ராணியே என்னைக் கண்டு நடுங்குவதைப் பார்த்து விட்டுமா இப்படிச் சொல்கிறாய்? பார்! இன்றிரவே ஒன்பது பிசாசுகள் வந்து உன்னை உயிரோடு மயானத்துக்குத் தூக்கிச் சென்று"

"வேண்டாம், வேண்டாம்! உன் பிசாசுகள் எல்லாம் உன்னிடமே இருக்கட்டும். எனக்கென்ன வந்தது? இளைய ராணியின் மோதிரத்தைக் காட்டினால் நீ கேட்டதைக் கொண்டு வந்து கொடுத்து விடுகிறேன். ஆனால் அவசரப்படாதே! தோட்டம் அழிந்து கிடப்பதைப் பார்க்க அடிக்கடி பெண்கள் இங்கே வருகிறார்கள். எல்லாரும் சாப்பிடும் சமயத்தில் நான் உன்னிடம் சாவியைக் கொண்டு வந்து கொடுக்கிறேன் அதுவரை பொறுத்திரு!"

"ஆகட்டும் எனக்கும் கொஞ்சம் சாப்பாடு கொண்டு வா! சாப்பிட்டு இரண்டு நாள் ஆகிறது நிறையக் கொண்டு வா!" என்றான் ரவிதாஸன்.

தாதிப் பெண் போன பிறகு, ரவிதாஸனும் சோமன் சாம்பவனும் விழுந்து கிடந்த மரம் ஒன்றின் மேல் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அறியாத வண்ணம் மந்தாகினியும் சற்று தூரத்தில் மறைவான இடத்தில் உட்கார்ந்து கொண்டாள்.

ரவிதா்ஸனும் தாதிப் பெண்ணும் பேசியது ஒன்றும் அவளுக்குப் புரியாவிட்டாலும் ஏதோ நடக்கப் போகிறதென்று ஊகித்துக் கொண்டாள்.

(தொடரும்...)

குரல் வந்த இடத்தை நோக்கி அந்தப் பெண் நடந்து வந்தாள். மரத்தின் மறைவிலிருந்து ரவிதாஸனும் முன்னால் வந்தான். காந்த சக்தி கொண்ட கண்களால் அவனை விழித்துப் பார்த்தாள்.

"மந்திரவாதி, வந்து விட்டாயா? இளைய ராணி கூட இங்கே இல்லையே? எதற்காக வந்தாய்?" என்று கேட்டாள்.

"பெண்ணே, இளைய ராணி அனுப்பித்தான் வந்தி

# சிறுவர் அரங்கம்



## சிவப்பு மலை!



(நேற்றைய தொடர்ச்சி)

ஒரு வீரன்கூட இறக்க வில்லை. அதே நேரம், ஒரு வாள் மீன கூட தப் பிக்கவில்லை! இறந்து கிடந்த மீன்களை எடுத்து சமைத்துப் பெரிய திருவிழாவாகவே கொண்டாடினர்.

ஆனால், அரசருக்கு ஒரு வருத்தம் இருந்தது. தனது தளபதியிடம் "அந்த சிறுவன் மிகவும் புத்திசாலி. என்னைவிட சக்தி வாய்ந்தவ[illegible] ஒரு நாள் வருவான்" என்றார்.

அன்று இரவு அந்தச் சிறுவனைக் கொல்ல நான்கு வீரர்களை அனுப்பினான் தளபதி. அவர்கள் அந்த மலைக்குச் சென்றனர். அங்கே பயங்கர உருவத்தோடு ஒரு கிழவி நின்றிருந்தாள், "ஏமாற்றுக்காரர்களே என்று கத்திய அவள், "உங்களுக்கு உதவி செய்த சிறுவனையே கொல்லப் போகிறீர்களா? நான் உங்களுக்குத் தண்டனை தருவேன்." என்றாள்.பயந்துபோன வீரர்கள் ஓட்டம் பிடித்தார்கள். திடீரென அவர்கள் முன் இருந்த தரைப் பகுதி பிளந்தது. அதில் விழுந்து இறந்து போனார்கள் வீரர்கள். அவர்களது இரத்தம் ஆறாக ஓடி மலையையே இரத்த நிறமாக்கியது. அதி லிருந்து அதற்கு "சிவப்பு மலை" என்று பெயர் வந்தது.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அந்தக் கிழ வியோ, சிறுவனோ காணப்படவில்லை. "எப்போது அந்தச் சிறுவன் திரும்பிவருகிறானோ அதுவரை மலை சிவப்பாகத்தான் இருக்கும். பல உயிர்களைக் காப்பாற்றிய அப்பாவி சிறுவனைக் கொல்வதற்காகப் போட்ட வஞ்சகத் திட்டத்தை நினைவு படுத்திக் கொண்டே இருக்கும்" இது சிங்கப்பூர் மக்களின் நம்பிக்கை! ( முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை நாம் அனுமதிக்கும் போதே அவை நம்மை தடம் மாற்றி விடுகின்றன. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வஞ்சகத்தனமான ஊழலை ஒழிப்பதற்கு உதவி செய்வோம்

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் ஊழல் ஒழிப்பு நடவடிக்கையில் அதிதீவிரம் காட்டி வருவது மனநிறைவைத் தருகிறது.

ஆம், நாட்டில் நீதியும் தர்மமும் மனிதநேயமும் தழைத்தோங்க வேண்டும். அப்போதுதான் அந்த நாட்டில் வறுமை ஒழியும். பஞ்சம் பசி தீரும். செல்வம் கொழிக்கும். இலட்சுமி கடாட்சம் நிலைக்கும்.

எனினும் எங்கள் நாட்டில் எங்கும் ஊழல் எதிலும் ஊழல் என்ற நிலைமை வந்துவிட்டது.

உண்மை. சட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் இலஞ்சம் வாங்குவதிலேயே குறியாக இருக்கிறார்கள்.

காலை முதல் மாலை வரை வியர்வை சிந்தி உழைத்து தன் குடும்பத்தின் சீவியத்துக்காக மூவாயிரம் ரூபாவுடன் பழைய மோட்டார் சைக்கிளில் செல்லுகின்ற ஒரு நாளாந்த தொழிலாளியை இடைமறித்து; அது பிழை, இது பிழை என்று கூறி அந்த ஏழைத் தொழிலாளியின் மூவாயிரம் ரூபா சம்பளத்தில் இரண்டாயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுக் கொள்கின்ற ஈனப் பிறவிகள் பொலிஸ் உத்தியோகத்தர்களாக இருக்கிறார்கள் என்றால், எங்கள் நாட்டில் தர்ம தேவதை எங்ஙனம் குடியிருப்பாள்.

இதுமட்டுமல்ல மண் கடத்தல், கொள்ளை, களவு, வாள்வெட்டு என அத்தனை பாதகங்களுக்குப் பின்னால் ஒரு தரப்புப் பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளனர் என்ற உண்மையை தயவுசெய்து யாரும் மறுத்துவிடாதீர்கள்.

இதுபோல பண்பு நிறைந்த – பக்குவமான – மற்றவர்களைப் பார்த்து டேய் என்று சொல்லாத – நடந்த இடத்துப் புல்லும் சிலும்பாத அப்பாவி மக்களின் காணிகளைக் கபளீகரம் செய்கின்ற மிக மோசமான கொடூரத்துக்குப் பின்னால், ஒரு சில சட்டத்தரணிகள் இருக்கிறார்கள் என்ற உண்மையை வடமாகாண சட்டத்தரணிகள் சங்கம் ஒருபோதும் மறந்தும் மறுத்தும் விடக்கூடாது.

வைத்தியசாலையில் மருத்துவரின் பொறுப்பற்ற செயலால் ஓர் உயிர் இறந்துபோவதும் ஒரு சட்டத்தரணியின் நேர்மையீனத்தால் அப் பாவிப் பொதுமகன் தன் காணியைப் பறிகொடுத்துக் கண்ணீர் விடுவதும் நீதிமன்றுக்கு அலைந்து திரிவதும் எங்கே வீடு புகுந்து தங்களை வெட்டி விடுவார்களோ என்று அவர்கள் சதா ஏங்கி ஏங்கி வாழ்வதும் ஒன்றல்லவோ.

ஆக, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் ஆட்சியில் ஊழல் ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுவது கண்டு நாம் புளகாங்கிதம் அடைய வேண்டும்.

ஊழல் ஒழிப்பு நடவடிக்கைக்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இதைச் செய்வதன் மூலம் தவறான பாதையில் பயணிக்க நினைப்பவர்களும் திருந்தி நல்வாழ்வு வாழ முடியும்.

ஆகையால் ஊழல் ஒழிப்பை எந்தப் பேதமுமின்றி வரவேற்போம். ஆதரவளிப்போம்.

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கான நீதியின் அவசரத்தை ஐ.நா.வில் வலியுறுத்திய பிரிட்டன்

(ஜெனிவா)

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான புதிய பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றிய பிரிட்டன் பிரதிநிதி, நீண்டகாலமாக நீதிக்காகப் போராடிவந்த நிலையில் அண்மையில் உயிரிழந்த மருத்துவர் மனோகரனை நினைவுகூர்ந்ததுடன், இது போலவே பல குடும்ப உறுப்பினர்கள் தமது அன்புக்குரியவர்களுக்கான நீதி கிட்டாமலும் காணாமல் போன தமது உறவுகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமலும் உயிரிழந்திருக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டி அவர்களுக்கான நீதி மிக விரைவாகப் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

இதுகுறித்து மேலும் உரையாற்றிய பிரிட்டன் பிரதிநிதி,

நீண்டகாலமாக நிலவும் மனித உரிமைகள் சார் கரிசனைகள் மற்றும்பல தசாப்தகால இன மோதலினால் ஏற்பட்ட காயங்களுக்குத் தீர்வு காண்பதை முன்னிறுத்தி தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் நடவடிக்கைகள் மற்றும் அதுசார்ந்த கடப்பாடு என்பன இப்பிரேரணையின் ஊடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

இக்கடப்பாடுகளை உரியவாறு நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

அதேபோன்று தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் மனிதப்புதைகுழி அகழ்வுகள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் நீண்டகாலமாகக் காத்திருக்கும் பதில்களை வழங்குவதற்கான இயலுமையைக் கொண்டிருக்கின்றன.

இதுகுறித்த விசாரணைகள் எதிர்கால அடையாளங்காணல் முயற்சிகளுக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய வகையிலும் பாதிக்கப்பட்ட நபர்களின் கௌரவத்தைப் பாதுகாக்கும் விதத்திலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதேவேளை சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலகத்தை ஸ்தாபிப்பதானது யுத்தகால மீறல்களுடன் தொடர்புடைய தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான முக்கிய நகர்வாக அமையும்.

அத்தோடு மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் குடும்பத்தினர் மீதான கண்காணிப்புக்கள் மற்றும் ஒடுக்குமுறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதானது நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் இன்றியமையாததாகும் என்றார். (ம-7)

## மிளகாய்த் தூள் என நினைத்து இரசாயனத்தை தவறுதலாக ருசி பார்த்த மாணவர்கள்

தம்புள்ளை பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றின் ஆய்வகத்திலிருந்த சிவப்பு நிற இரசாயனப் பொருளை மிளகாய் தூள் என நினைத்து ஏழாம் வகுப்பு மாணவர்கள் சுவைத்ததால், ஐந்து மாணவர்களும் இரண்டு மாணவிகளும் தம்புள்ளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் குறித்து முறைப்பாடு பெறப்பட்டதையடுத்து தம்புள்ளை உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் எம்.எஸ்.கே. விக்ரமநாயக்க மற்றும் தலைமையகப் பொலிஸ் பரிசோதகர் சுகத் பண்டார ஆகியோர் வைத்தியசாலைக்குச் சென்று விசாரணை நடத்தினர். இதன்போது இரும்பைக் கண்டறியப் பயன்படும் இரசாயனப் பொருளை மாணவர்கள் சுவைத்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது. (ம-7)

## யாழ்.போதனாவில் குருதித் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையில் "O+" குருதி வகைக்குத் தற்போது தீவிர தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையின் குருதி வங்கியில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் "O+" குருதி வகைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது தட்டுப்பாடு மேலும் தீவிரமாகியுள்ளதாகக் குருதி வங்கி தெரிவித்துள்ளது.

எனவே "O+" வகை குருதி உடையவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு நேரடியாக வருகைதந்து குருதிக் கொடையில் ஈடுபடுமாறு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் குருதி வங்கிப் பிரிவினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-7)

## கொழும்பிலிருந்து சென்ற ஏர் இந்தியா விமானத்தில் பறவை மோதி விபத்து

இலங்கையிலிருந்து 158 பயணிகளுடன் இந்தியாவிற்குப் பயணித்த ஏர் இந்தியா விமானம் பறவையுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் நோக்கிப் பயணித்த விமானமே பறவையுடன் மோதுண்டுள்ளது.

குறித்த பயணத்தில் 158 பயணிகள், விமானப் பணியாளர்கள் இணைந்திருந்த நிலையில் எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படாத வண்ணம் விமானம் பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்டதாக ஏர் இந்தியா நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம-7)

## பணி இடை நீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளுக்கு பாதிச் சம்பளம் பல கொடுப்பனவுகள் நிறுத்தம்

பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள நீதிபதிகளுக்கு பாதிச் சம்பளம் மட்டுமே வழங்கவும், அவர்களுக்குரிய பல கொடுப்பனவுகளை நிறுத்தவும் நீதிச் சேவை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நீதிச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் பிரசன்ன அல்விஸ் இனால் இது தொடர்பான சுற்றறிக்கையை அனைத்து மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் இடைநீக்கம் செய்யப்பட்ட நீதிபதிகளுக்குப் பாதிச் சம்பளம், தொழில்முறைக் கொடுப்பனவுகள், தனிப்பட்ட கொடுப்பனவுகள், வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் மற்றும் மொழிக் கொடுப்பனவுகள் மட்டுமே வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு குற்றச்சாட்டுகளில் குற்றம் சாட்டப்பட்ட நீதிபதிகளைப் பணி இடை நீக்கம் செய்ய நீதிச்சேவை ஆணைக்குழு சமீபத்தில் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## தம்பதியினர் படுகொலை நால்வர் அதிரடிக் கைது

அம்பாந்தோட்டை, ஹூங்கம, வடிகல பகுதியில் உள்ள வீடொன்றில் தம்பதியினர் மீது கூரிய ஆயுதத் தாக்குதல் மேற்கொண்டு கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் நேற்று (07) காலை கைது செய்யப்பட்டதாகவும் கைதான பிரதான சந்தேக நபர் அந்தப் பகுதியில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுபவர் என்பதும் தெரியவந்துள்ளதாக ஹூங்கமப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹூங்கம, வடிகலப் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் அதிகாலை 12.45மணியளவில் குறித்த படுகொலைச் சம்பவம் இடம்பெற்றது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

**18**

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

இலங்கை அரசியற் சரித்திரத்திலும் ஓர் புதிய அத்தியாயம் ஆரம்பமாயிற்று. சட்டவாக்கச் சபையின் அங்கத்தவர் தொகை இருபத்தொன்றாக அதிகரிக்கப்பட்டது.

அதில் உத்தியோக அங்கத்தவர் தொகை பதினொன்று, உத்தியோகத்தவரல்லாத அங்கத்தவர் தொகை பத்து. உத்தியோகத்தரல்லாதவருள் நால்வரை கல்வியறிவுள்ள இலங்கையர் வகுப்புவாரியாகத் தேர்ந்தெடுத்தனர். (இலங்கையருள் நான்கு வீத மக்களே கல்வி அறிவுள்ளவர்களாக அக்காலத்தில் இருந்தனர்.) அதாவது நகர்ப்புற ஐரோப்பியருக்கு ஒன்று: நாட்டுப்புற ஐரோப்பியருக்கு ஒன்று. பறங்கியருக்கு ஒன்று கல்வியறிவுள்ள இலங்கையருக்கு ஒன்று எஞ்சிய ஆறு உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்கள் ஆளுநரால் நியமனஞ் செய்யப்பட்டனர்.

1910 ஆம் ஆண்டின் 13 ஆம் கட்டளைச் சட்டத்தின்படி, கல்வித் தகமையுடைய இலங்கை வாழ் கல்வி கற்றவர்கள் வாக்குரிமையைப் பெற்றதுடன், அவர்கள் தமக்கென "கல்வி கற்ற இலங்கையரின் பிரதிநிதி" என ஒருவரைத் தெரிந்தெடுக்கும் வாய்ப்பையும் பெற்றனர்.

மக்கலம் அரசியல் அமைப்பின் பிரகாரம் இலங்கையில் வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. இவ் வாக்குரிமை மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை அல்லது கற்றோருக்கான வாக்குரிமை என அழைக்கப்பட்டது. (இது கல்வி அறிவு, சொத்து உள்ள 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்டது)

#### தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம்

மக்கலம் அரசியல் அமைப்பின் பிரகாரம் ஐரோப்பியர் (கிராமம்), பறங்கியர், படித்த இலங்கையர் ஆகிய தேர்தல் தொகுதிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற தீவெங்குமுள்ள வருமான மாவட்டங்கள் தேர்தல் தொகுதிகளாகின.

ஐரோப்பியர் (நகரம்) தேர்தல் தொகுதிக்காக கொழும்பு, கண்டி, காலி ஆகிய மாநகரப் பகுதிக்குள் அடங்கும் பகுதிகள் தேர்தல் தொகுதிகளாயின.

இவ் ஆணைக்குழுவின் பரிந்துரையின் படி, நாடாளவிய மட்டத்தில் குறிப்பிட்ட (படித்த, பணவசதியுடைய) இலங்கையர்களுக்கு (கிட்டத்தட்ட 3000 பேர், இதில் சிங்களவர் - 56%, தமிழர் - 36%) மட்டுமே வாக்குரிமை வழங்கப்பட்டது.

தமிழ் மொழியில் புலமையுள்ள படித்த இலங்கையர்களுக்கும் வாக்குரிமை வழங்கப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணச் சங்கத்தினால் விடுக்கப்பட்ட வேண்டுகோள் கருத்தில் எடுக்கப்படவில்லை.

#### முதலாவது சட்டவாக்கச் சபைத் தேர்தல் -1911

1911 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற சட்டவாக்கச் சபைத் தேர்தலில், படித்த இலங்கையருக்கான தேர்தலில் அளிக்கப்பட்ட 2626 வாக்குகளில் 1645 வாக்குகளைப் பெற்ற சேர் பொன் இராமநாதன் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட தாழ்நிலச் சிங்களவரான டாக்டர் மாக்கஸ் பெர்ணந்துவை தோற்கடித்து முதல் சிறுபான்மைப் பிரதிநிதியாக வெற்றிபெற்றார். சேர் பொன் இராமநாதன் வெற்றி பெறுவதற்கு சிங்கள மக்களிடையே இனவாதத்தை விட சாதிவாதம் மேலோங்கியிருந்ததும் ஒரு காரணமாகவிருந்தது. உயர்சாதிச் சிங்களவர்கள் சேர் பொன் இராமநாதனுக்கு வாக்களித்தார்கள்.

இக் காலத்தில் இச் சட்டவாக்கச்சபையில் தெல்லிப்பளையில் பிறந்த சேர் அம்பலவாணர் கனகசபை (1906-1919) உடுப்பிட்டியில் பிறந்த சட்டத்தரணி கதிரவேற்பிள்ளை பாலசிங்கம் (1914), J.N. திசைவீரசிங்கம் என்பவர்கள் உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

#### 1917 ஆம் ஆண்டுத் தேர்தல்

1917 ஆம் ஆண்டில் நடைபெற்ற சட்டவாக்கச்சபையின் படித்த இலங்கையருக்கான இரண்டாவது தேர்தலில் 1704 வாக்குகளைப்பெற்ற சேர் பொன் இராமநாதன் அவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஜே.எஸ். ஜெயவர்த்தனவை (பெற்ற வாக்குகள் -41) தோற்கடித்து மீண்டும் வெற்றிபெற்றார். ஜே.எஸ். ஜெயவர்த்தன உயர் சாதியைச் சேர்ந்தவராகையால் தாழ்நிலச் சிங்களவர்கள் இத் தேர்தலில் சேர் பொன் இராமநாதனுக்கு வாக்களித்தார்கள். சேர் பொன் இராமநாதன் 1911 முதல் 1921 வரை உறுப்பினராகவிருந்தார்.

இக் காலத்தில் இச் சட்டவாக்கச்சபையில் வண்ணார்பண்ணையில் பிறந்த சேர் அருணாச்சலம் சபாபதி (1917-1921) பதவிநிலை பெறா அங்கத்தவராக இருந்தது குறிப்பிடத்தக்கது. சேர் பொன் சேர் பொன் அருணாச்சலம் 1906இல் இலங்கைச் சட்டவாக்கச் சபையில் பதவிநிலை பெற்ற அங்கத்தவராகவும் 1912 இல் சட்ட நிருவாக சபையில் (Executive Council) அங்கத்தவராகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

இப் புதிய சட்டவாக்கச் சபை அமைப்பிலும் (1910) உத்தியோக அங்கத்தவர்கள் தொகை கூடுதலாகவே இருந்தது. 1912ஆம் ஆண்டுத் தேர்தலின் பின் ஏற்பட்ட இம் மாற்றம் வெகு சீக்கிரத்தில் இலங்கை யொரு சுதந்திர நாடாகவும் மக்கள் பிரதிநிதிகளே ஆட்சியாளர்களாகவும் மாற வழி வகுத்தது.

இவ்வாண்டில்? இலங்கையருக்கு வழங்கப்பட்ட தேர்தற் பிரதிநிதித்துவ முறையைத் தொடர்ந்தே பின்வந்த மனிங், டொனமூர், சோல்பரி, ஆகியோர் தீவிர மாற்றங்களைச் செய்து சில ஆண்டுகளுக்குள்ளேயே இலங்கை ஒரு பூரண சுதந்திர நாடாக எழுச்சியுற வழிவகுத்தன.

1912ஆம் ஆண்டு நிறுவப்பட்ட சட்டவாக்கச் சபை இலங்கைச் சரித்திரத்தில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தியபோதிலும் இன்னும் கூடிய உரிமைகளைப் பெறுவதில் மக்கள் கவனம் செலுத்தினர், இவர்களது வெற்றிக்கு இரு சம்பவங்கள் சாதகமாகவிருந்தன. ஒன்று கம்பளையில் தொடங்கிய சிங்கள முஸ்லீம் கலகம், இரண்டாவது படிப்பாகக் குடியேற்றங்களுக்கு சுயாட்சி வழங்குவதற்கு வழிகாண வேண்டுமென ஆங்கில அரசின் கொள்கை வரையறுக்கப்பட்டமை.

#### 1915 ஆம் ஆண்டுக் கலகங்கள்:

1912 இல் கம்பளை விகாரையின் நிலமை, அரசாங்க முகவர் சக்ஸ்ரனிடம் (Saxton) 'எசலப் பெரஹரா "வை நடாத்துவதற்கு அனுமதி கேட்டு நின்ற பொழுது, அவர் "முஸ்லிம் பள்ளிவாசலின் இரு எல்லைகளிலும் ஐம்பது யார்களுக்கு அப்பால் சங்கீதம் நிறுத்தப்படுமாயின் அனுமதி வழங்கப்படும்" என அறிவித்தார்.

இம் முடிவுக்கெதிராக கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட பொழுது, நீதிபதி (Dr. Paul E. Pieris) வழக்காளிக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூறினார். ஆனால் அரசாங்க முகவரின் தூண்டுதலின் பேரில், சட்டத்துறை நாயகம் இத்தீர்ப்புக்கெதிராக உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தபொழுது, அம்மன்றம் 1915 பெப்ரவரி 2இல் கண்டி மாவட்ட நீதிபதியின் தீர்ப்பை நிராகரித்தது. விகாரையின் நிலமை, பிறிவுக் கவுன்சிலுக்கு மேல் முறையீடு செய்தார்.

முஸ்லீம்களுக்கும் பௌத்தர்களுக்குமிடையில், 1915 வைகாசி 28 வெசாக் பௌர்ணமி இரவின் ஊர்வலத்தின் பொழுது கண்டியில் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றன. அடுத்த தினமான 29 ஆம் நாள் காலை, தலதா மாளிகாவையில் வழிபாட்டுக்கு வந்த கிராமப்புற மக்கள் வெகுண்டு, ஆர்ப்பாட்டங்கள் பல நடத்தினர். முஸ்லீம்களுக்கும் சிங்களவருக்குமிடையே நடைபெற்ற ஒரு கைகலப்பின் பின்னர், சனக்கூட்டம் கலைக்கப்பட்டது. தலதா மாளிகாவையின் அழிவு, முஸ்லிம்களின் அட்டூளியங்கள், பெண்களின் கற்பழிப்பு போன்ற வதந்திகள் மின்னல் வேகத்தில் நாட்டில் பரவின.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமுர்த்தி...

அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது விபத்துக்குள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (06) மாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## ஐஸ் போதை...

கைது செய்யப்பட்டுள்ளார்.

592வது இராணுவப் படைப்பிரிவின் கீழ் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக, ஏ9 வீதியின் கொக்காவில் பகுதியில் நேற்றுக் காலை குறித்த பொலிஸ் அதிகாரி ஐஸ் போதைப்பொருளுடன் இருந்தவேளை, விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ் அதிகாரி தனது உடைமையில் 92 கிராம் 400 மில்லிக்கிராம் ஐஸ் போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளதோடு, மாங்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அத்தோடு, அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## ரயில் மோதி...

சாந்தகுமார் (வயது-41) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த முதலாம் திகதி அதிகாலை யாழில் இருந்து கொழும்பு சென்ற புகையிரதத்துடன் மோதுண்டு படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை (06) பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம்மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## வடக்கில் லஞ்ச்...

தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்திலுள்ள மாநகர சபைகளின் மேயர்கள், நகர சபைகளின் தவிசாளர்கள், பிரதேச சபைகளின் தவிசாளர்கள் ஆகியோருக்கும் வடக்கு மாகாண ஆளுநருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

நேற்றைய கலந்துரையாடலில் 01.01.2026 இலிருந்து வடக்கு மாகாணம் முழுவதிலும் லஞ்ச் சீற் பாவனையைத் தடை செய்வது எனவும் பதிலீடாக வாழையிலையைப் பயன்படுத்துவது மற்றும் உணவுத்தட்டுக்களைக் கொதிக்க வைப்பது ஆகிய வற்றைப் பின்பற்றலாம் என்றும் இது தொடர்பில் தீர்மானம் நிறைவேற்றாத உள்ளூராட்சி மன்றங்கள் தீர்மானம் நிறைவேற்றுவது எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் மேயர்கள், தவிசாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டுள்ளது. (ம-7)

## ஒரு இலட்சத்து...

கூறி சமூக வலைத்தளங்களில் விளம்பரம் செய்துள்ளார்.

இந்த விளம்பரத்தை நம்பிப் பலர் அவரைத் தொடர்புகொண்ட வேளை கைபேசியை வீட்டுக்குக் கொண்டு சென்றே வழங்குவதாகக் கூறி முற்பணம் கேட்டுள்ளார்.

இந்நிலையில் பலர் அவரது கணக்கு இலக்கத்துக்குப் பணத்தைச் செலுத்தியுள்ளனர். பணத்தை வழங்கியவர்கள் அதன் பின்னரே தாம்.ஏமாற்றப்பட்டதை உணர்ந்தனர்.

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் இவ்வாறு ஒரு இலட்சத்து எழுபத்தோராயிரம் ரூபாவை இழந்துள்ளார். இது குறித்து நேற்றுமுன்தினம் (06) வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

நீதிமன்ற உத்தரவைப் பெற்று கல்முனைப் பொலிஸார் ஊடாகக் குறித்த சந்தேகநபரைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## பிரதமர் ஹரிணி...

குறித்த உச்சிமாநாடு எதிர்வரும் ஒக்ரோபர் 17 மற்றும் 18 ஆகிய திகதிகளில் புதுடில்லியில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சுதுமலை...

சுதுமலை அம்மன் ஆலயத்தின் நிர்வாகத்தினரின் தன்னிச்சையான செயற்பாடுகளுக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் அசமந்தப் போக்கான செயற்பாடுகளுக்கும் எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுக் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சீரணி நாகபூசணி அம்மன் கோவிலுக்கு முன்பாக ஆரம்பமான இந்தப் போராட்டமானது சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் வரை சென்றது. பின்னர் பிரதேச செயலக பதவிநிலை அதிகாரி ஒருவரிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் ஆலயம் தொன்மையும் புதுமையும் வாய்ந்த ஒரு ஆலயம். ஆலய நிர்வாகத்தின் குறுகிய சிந்தனையுடன் 48 கோடி ரூபாய் நிதியில் ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

அந்தப் புனரமைப்புப் பணிகளுக்காக எனக் கூறி எமது மூதாதையர்கள் அமைத்த பழைமையான கட்டடங்கள் இடித்தழிக்கப்பட்டன. இதனால் பழைய ஆதாரங்கள் இல்லாமல் போகும் அபாயம் உள்ளது. புனர்நிர்மாணத்தை நாங்கள் தடுக்கவில்லை தேவையான விடயத்தை புனர்நிர்மாணம் செய்துவிட்டு ஆலயத்தின் பழைமையைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். ஆலயத்தில் பழைமையே எமது இருப்பினையும் எடுத்துக்காட்டும்.

போலி ஆவணங்களைத் தயாரித்து, அதன் மூலப்பிரதிகள் இல்லாமல் பிரதிகளை பிரதேச செயலரிடம் ஒப்படைத்த நிலையில் பிரதேச செயலகமும் அதற்கு அனுமதி வழங்கியதால் அந்தப் பழைமையான கட்டடம் இடிக்கப்பட்டுள்ளது என்று குற்றம் சுமத்தினர். (ம-7,104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.10.07
சீட்டிழுப்பு இலக்கம் 5975
K 2 8 5 1 8 1
அத சம்பத
K 5 1 8 1
சீட்டிழுப்பு இலக்கம் 550
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.10.07
சீட்டிழுப்பு இலக்கம் 0091
கும்பம் 15 16 20 49

தன நிதானய
திகதி - 2025.10.07
சீட்டிழுப்பு இலக்கம் - 2005
K 06 24 28 72 K

மெகா பவர்
திகதி 07/10/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2323
Q 04 04 19 39 41

ஜய
திகதி 2025.10.07
சீட்டிழுப்பு இலக்கம் 0243
N 2 1 1 5

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4217
சீட்டிழுப்பு திகதி 07.10.2025
T 07 23 30 80
T

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.10.07
சீட்டிழுப்பு இலக்கம் 1284
கன்னி 07 16 20 26 கன்னி

உத்தியோகபூர்வ முடிவுகள்
07.10.2025
வெற்றி வாரம் 0683
0
4 8 1 5 0 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.25,874,353.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2949
சீட்டிழுப்பு திகதி 2025.10.07
தினம் செவ்வாய்க்கிழமை
13 31 40 75 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,399,568.00

சனிதா
திகதி 07.10.2025 வெற்றி வாரம் 5110
11 44 50 80 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,062,896.80

0786
07.10.2025
செவ்வாய்க்கிழமை
18 35 50
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4661
சீட்டிழுப்பு திகதி 07.10.2025
தினம் செவ்வாய்க்கிழமை
11 19 45 52
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,487,476.80

F 23 03 14 22 46
2125
07.10.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.598,613,968.60

ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம் : 2775
சீட்டிழுப்பு திகதி : 2025.10.07
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,544,788.80
21 22 24 62 X

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆக்கபூர்வமான...

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் கடந்த 8 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமானது. இக்கூட்டத்தொடரின் போது நிறைவேற்றும் நோக்கில் பிரிட்டன் தலைமையில் கனடா, மாலாவி, மொன்டெனீக்ரோ மற்றும் வட மெசிடோனியா உள்ளிட்ட இணையனுசரணை நாடுகளால் "இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்" எனும் தலைப்பில் தயாரிக்கப்பட்ட 60/L1/Rev.1 எனும் புதிய பிரேரணை நேற்று முன்தினம் திங்கட்கிழமை (6) பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

இதன்போது புதிய பிரேரணை தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி உரையாற்றிய சைப்பிரஸ் நாட்டின் பிரதிநிதி, கடந்த 12 மாத காலத்தில் இலங்கை அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டிருக்கும் முன்னேற்றகரமான மறுசீரமைப்புக்களை வரவேற்பதாகக் குறிப்பிட்டார்.

அதேபோன்று நிலையான பொருளாதார மேம்பாட்டை அடைவதற்கும், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அவசியமான ஒத்துழைப்புக்களை வழங்கத் தயாராக இருப்பதாக உறுதியளித்த அவர், பொறுப்புக்கூறல் விடயத்தில் இன்னமும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என வலியுறுத்தினார்.

அதுமாத்திரமன்றி நீதி மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயற்திட்டத்தின் முக்கியத்துவம் குறித்துப் பிரஸ்தாபித்த அவர், நிலையான நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கு நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டியது மிக அவசியம் என்றார். (ம-7)

## பொருளாதார...

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் இடையேயான கலந்துரையாடல் ஒன்று நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கடனை மறுசீரமைக்கும் செயற்பாட்டுக்கான ஆறாவது தவணைக் கடன் வழங்கப்படுவதற்கு முன்னர் மேற்கொள்ளப்படும் ஐந்தாவது மதிப்பாய்வின் மத்திய கட்டத்திற்காகவே இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

பொருளாதார ரீதியாக வங்குரோத்தான நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுத்து, அபிவிருத்தியை நோக்கி இட்டுச் செல்வதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என்றும், அதற்கான ஒரு மூலோபாய வேலைத்திட்டம் அரசாங்கத்திடம் இருப்பதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இதன்போது குறிப்பிட்டார்.

பொருளாதார மீட்சியை அடைய வேண்டுமானால், சர்வதேச நாணய நிதியம் வழங்கிய இலக்குகளைக் கூட கடந்து செல்ல வேண்டிய அவசியம் இருப்பதை அரசாங்கம் உணர்ந்துள்ளதாகவும், அதற்காக முறையான வேலைத்திட்டம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

பொருளாதார புத்துயிர்ப்பை அடைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை மேலும் ஈர்க்க வேண்டும் என்றும், அதற்காக நாட்டில் முதலீட்டுக்கு உகந்த சூழலை உருவாக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நாட்டின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் பாராட்டியதுடன், எதிர்காலத்தில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இரு தரப்பினரும் மேலும் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் தொழில் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, நிதி அமைச்சின் செயலாளர் ஹர்ஷண சூரியப்பெரும, மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க உள்ளிட்டோரும், சர்வதேச நாணய நிதியம் சார்பில் அதன் தூதுக்குழுத் தலைவர் எவன் பாபஜோர்ஜியூ உள்ளிட்டோரும் கலந்துகொண்டனர்.(ம-7)

## பொலிஸாரின்...

முறைப்படியான தேடுதல் ஆணை இல்லாது பொலிஸார் முன்னெடுத்துவரும் சட்ட முரணான செயற்பாடுகளைக் கண்டித்து வடக்கின் சட்டத்தரணிகள் ஒரு நாள் பணிப்புறக்கணிப்பை நேற்று முன்னெடுத்தனர்.

யாழ். மாவட்டத்தின் அனைத்து நீதிமன்றங்கள் மற்றும் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா உள்ளிட்ட மாவட்டங்களை பிரதிநிதித்துவம் செய்யும் சட்டத்தரணிகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான சட்டத்தரணிகளின் பிரசன்னத்துடன் குறித்த போராட்டம் யாழ்ப்பணத்தில் உள்ள நீதிமன்ற வளாகம் முன்னிலையில் நேற்றுக் காலை (07) இடம்பெற்றது.

கடந்த 5 ஆம் திகதி முறையற்ற வகையில் காணி ஒன்றிற்கு உரிமம் ஏற்பாடு செய்துகொடுத்ததாகக் கூறி யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கடமையாற்றும் பெண் சட்டத்தரணி ஒருவரின் இல்லத்தில் அவரைக் கைது செய்யும் முகமாக வீட்டிற்குள் நுழைந்த பொலிஸார், குறித்த வீட்டில் சட்டத்தினால் வழங்கப்பட்ட அதிகாரம் எதுவுமின்றி தேடுதல் நடத்தும் தோரணையில் அச்சுறுத்தலாக யாழ்ப்பாணம் விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் நடந்து கொண்டனர்.

குறித்த சட்டமுரணான செயற்பாட்டைக் கண்டித்து சட்டத்தரணிகள் போராட்டம் நடத்தினர். போராட்டத்தின் போது ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த சிரேஸ்ட சட்டத்தரணி திருக்குமரன் - குறித்த போராட்டம் சட்டத்தரணி மீது நடவடிக்கை எடுப்பதைக் கண்டிப்பதானதல்ல. சட்டம் அனைவருக்கும் பொதுவானது.

ஆனால் அந்த சட்டத்தை சரியான தேடுதல் ஆணை இல்லாது மேற்கொண்டு வரும் செயற்பாடுகள் ஏற்றுக்கொள்ள முடியாது. அத்துடன் குறித்த செயற்பாடு பொலிஸாரின் அத்துமீறிய செயற்பாட்டையே காட்டுகின்றது.

எனவே சட்டத்தரணிகளுக்கு எதிராக அல்லது பொதுமக்களுக்கு எதிராக, பொலிஸார் முன்னெடுக்கும் சட்ட முரணான செயற்பாடுகளை கண்டித்தே இன்று(நேற்று) வடக்கின் சட்டத்தரணிகள் ஒரு நாள் பணிப்புறக்கணிப்பை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த போராட்டத்துக்கு ஆதரவாக கிழக்கின் சட்டத்தரணிகளும் சில மணி நேரம் புறக்கணிப்பைச் செய்து எமது போராட்டத்தை வலுப்படுத்தினர். எனவே சட்டத்தை முன்னெடுக்க முனையும் பொலிஸார் அதை சட்ட ரீதியாக - முறையான வகையில் மேற்கொண்டு நீதியை வழங்க அல்லது குற்றவாளி எனச் சந்தேகிக்கும் நபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது அவசியம் என்றும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104,285)


### மணப்பெண் தேவை

01. ஏழாலை, இந்து, 1986, திருவோணம், A/L (Germany), Super market Owner, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54758)
02. வேலணை, இந்து, 1987, ஆயிலியம், IT Engineering, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53914)
03. அல்லைப்பிட்டி - வண்ணார்பண்ணை, 1988, விசாகம், BSc Engineering, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53784)
04. அளவெட்டி, இந்து, 1989, உத்தராடம், MSc in Electrical Engineering (UK), Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53552)
05. துன்னாலை, இந்து, 1984, மூலம், Graduate, Master of Business Administration (Hons) UK, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (49931)
06. கோப்பாய், இந்து, 1985, மிருகசீரிடம், BSc Civil Engineering (Moratuwa), MSc Engineering (UK), London Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(38719)
07. பளை, இந்து, 1984, அவிட்டம், PHD UK, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(33058)
08. கரவெட்டி, இந்து, 1984, விசாகம், Graduate, doing Business, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (37556)
09. யாழ்ப்பாணம், இந்து, 1982, அத்தம், Master in Electrical Engineering (USA), Divorce, USA + Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (24750)
10. காரைநகர், இந்து, 1993, பூசம், BSc Engineering, USA Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (31050)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (5610)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

### வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி
கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால்,
குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | தலைக்கு இரத்தம்
போகாமை | வாதம் | வயிற்றுப்புண் | Gastrtis | அல்சர்
மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான மூலிகை,
Acu சிகிச்சைகள் | அட்டாங்க யோகம் கற்கலாம்.
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(5609)

### உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்
40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- முதல் 50,000/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com
(C-4052)

### கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3670/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2440/-
குறைந்த விலை - நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
(C-4052)
UK 11Kg - 1390/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-
எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS 076 822 6241 076 822 6237

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127

### A/L - 2025 மாணவர்களுக்கான...

N.BABU ஆசிரியரின்
புவியியல் கருத்தரங்கு
> ஒக்ரோபர் - 11, 12, 13, 14 ஆம் திகதிகளில்
> ஆரம்பம் - 11.10.2025 சனி 11 a.m
> வெளி மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படும்.
DMI ஸ்ரான்லி வீதி, ஆரியகுளம், யாழ்ப்பாணம்.
T.P : 077 936 5087

### காணி விற்பனைக்கு

யாழ். நகரில் இருந்து 3Km தூரத்தில் ஆறுகால் மடத்தில் சுற்றுமதிலுடன் கூடிய 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு :
071 700 8954
(C-4056)

### காணி விற்பனைக்கு

தெல்லிப்பழை சந்திக்கு அருகாமையில் K.K.S வீதியில் இருந்து 100m ல் 1 ½ பரப்பு, 1 ¾ பரப்பு மற்றும் 2 பரப்புக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளது.
076 663 3199
(5527)

### காணி விற்பனைக்கு

யாழ். வண்ணார்பண்ணை 9, நாவலடி ஒழுங்கையில் 1 ½ பரப்பு கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு.
077 873 8140
077 390 8137
(5606)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org